விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 09 திங்கட்கிழமை (22.04.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 124

# தமிழ் மக்களின் வீடுகள் தீக்கிரை

## முள்ளியவளையில் அராஜகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளை மத்தியில் மீள்குடியேறியுள்ள தமிழ்க் குடும்பங்களின் நான்கு அரை நிரந்தர வீடுகள் நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இவ் அராஜகச் செயலினால் அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை உருவாகியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)



## சட்டவிரோத அவுஸ்.பயணம்; பருத்தித்துறையில் 80 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக படகின் மூலம் அவுஸ்திரேலியா நாட்டிற்கு செல்ல முயன்ற கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட 80 பேரை பருத்தித்துறை பகுதியிலுள்ள இலங்கைக் கடற்படையினர் கைது செய்து விசாரணைகளுக்குட்படுத்தி வருகின்றனர் என கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறைமுனை இம்பசிட்டி பகுதியிலிருந்துதனியார்படகு ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அப்பகுதிக் கடற்படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, தாழையடி, வத்திராஜன், நாகர்கோவில், சக்கோட்டை, மருதங்கேணி போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அவுஸ்தி (20ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேசன் தரப்பினர் மீது தாக்குதல்

மூவர் காயம்



(கொட்டகலை)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வலியுறுத்தி போராட்டம் நடத்த முற்பட்ட 16 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் மீது சிலர் நடத்திய தாக்குதலில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட மூவர் காயமடைந்துள்ளனர்.

கொட்டகலை நகரில் நேற்று முற்பகல் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஸ்பெயின் ஆதரவு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஸ்பெயினின் அமைச்சர்களும் உறுப்பினர்களும் தமது முழு ஆதரவினையும் வழங்க முன்வந்துள்ளனர் .

உத்தியோகபூர்வவிஜயம்ஒன்றை மேற்கொண்டு ஸ்பெயின் சென்றுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது. விவசாயம், உணவு உற்பத்தி (19ஆம் பக்கம் பார்க்க)

## "சர்ச்சைக்குரிய பேச்சை குறையுங்கள்"

### அரச இராஜதந்திரிகளிற்கு அவசர சுற்றுநிருபம்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்காமல் எந்தவித ராஜதந்திர தீர்மானங்களையும் எடுக்கக் கூடாது என வெளிநாடுகளில் பணியாற்றும் தனது அனைத்து ராஜதந்திரிகளுக்கும் இலங்கை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக பூரண விளக்கத்துடன் வெளிவிவகார அமைச்சின் ஊடாக அரசாங்கம் தனது இராஜதந்திரிகளிற்கு அவசர சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரியவருகிறது.

அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்கிரம சூரிய கொழும்பு நிர்வாகத்துடன் கலந்துரையாடாமல் இலங்கையின் பாதுகாப்பு நிலைவரங்கள் சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகளுடன் கடந்த வாரம் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது சீனாவுக்கு எதிராக அவர் கருத்து வெளியிட்டதாகவும் அமெரிக்காவுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட தயாராக இருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன. (19ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்புக்கு எதிராக 24ஆம் திகதி கண்டன போராட்டம்

### த.தே.ம. முன்னணி ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன அரசின் காணி சுவீகரிப்புக்கு எதிரான கண்டன போராட்டமொன்று நாளை மறுதினம் 24-ம் திகதி புதன் கிழமை நடத்தப்படவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப் போராட்டம் யாழ் மாவட்ட செயலகம் (கச்சேரி) முன்பாக மு.ப 11.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழத் தேசிய மக்கள் முன்னணிப் பொது செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த மாதம் இலங்கை அரசாங்கத்தின் காணி (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி சுவீகரிப்புக்...

அமைச்சர் யாழ்ப்பாணத்தில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான விசேட அலுவலகம் ஒன்றினை திறந்து வைத்திருந்தார். அதன் பின்னராக யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தின் பல்வேறு படையணிகளுக்காக அலுவலகங்களையும், தளங்களையும் நிரந்தரமாக்குவதற்காக தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சுவீகரிப்பதற்காக காணிச் சுவீகரிப்புச் சட்டத்தில் பிரிவு 2இன் கீழான அறிவித்தல்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒட்டப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வலிகாமம் வடக்கு உட்பட குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து கடந்த 20 ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழும் 30ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் நிரந்தரமாக தமது வாழ்விடங்களை இழக்கும் நிலை தோன்றியுள்ளது. மேற்படி காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய அனைத்து மாவட்டங்களில் தீவிரமாக நடைபெறுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இராணுவக் குறைப்பு நடவடிக்கையில் தாம் ஈடுபடுவது போல பாசாங்கு காட்டிவரும் இலங்கை அரசு மறுபுறத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான நில அபகரிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால் தமிழ் மக்களுக்கு எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

இந் நிலச் சுவீகரிப்பு நடவடிக்கையை உடன் நிறுத்தக் கோரியும், இடம்பெயர்ந்து வாழும் வலி.வடக்கு உட்பட்ட அனைத்து மக்களையும் உடன் மீள்குடியமர அனுமதிக்கக் கோரியும், இவ்விடயத்தில் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி.வடக்கு உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களது வேண்டுகோளின் அடிப்படையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் மேற்படி போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# சிகிச்சை பலனின்றி குடும்பஸ்தர் மரணம்

(மிருசுவில்)

மோட்டார் சைக்கிளும் ஹயஸ் வாகனமும் விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த 6 ஆம் திகதி சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தினை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை விக்டர் ஜெயகுமார் என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலன் இன்றி உயிரிழந்துள்ளார். (செ-85)

# மோ.சைக்கிள் விபத்து; இருவர் படுகாயம்

இரண்டு மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் காரைநகர் வீதியில் நேற்று மாலை 4.45 மணியளவில் இந்த கோர விபத்து சம்பவம் இடம்பெற்றது.

இதில் மானிப்பாயைச் சேர்ந்த இ.கபில் (வயது 19), எஸ்.கண்ணா (வயது 23) ஆகியோரே காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(செ-6-17)


யாழ்ப்பாணம் செல்லா சினிமா




சரத்குமார், சேரன், சூர்யா, பிரசன்னா, பிரகாஸ் ராஜ் மற்றும் பிரபலமான நட்சத்திரங்கள் நடித்த

சென்னையில் ஒரு நாள்

10.30, 2.30, 6.30, 9.30

இன்று முதல் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு





## தர்ஷா பயிற்சியகம்

மகளிர்க்கான மூன்று மாத கால துரித பயிற்சிகள் ஆரம்பம்
24.04.2013 புதன்கிழமை காலை 9.30 மணி



- கேக் ஐசிங் வகைகள் (Cake Icing)
  - பட்டர் ஐசிங்
  - றோயல் ஐசிங்
  - பார்ச் மண்ட் ஐசிங் (Parchment Icing)
  - Frosting Icing
  - மாச்சீனி மலர்கள் (Sugar Flowers)
  - Fondant Icing, Water Icing
- கூந்தல் வடிவமைப்புக்களும் முடிசீராக்களும் (Hair Styling & Dressing)
  - 50 விதமான கொண்டைகள்
  - Hair Straightening
  - Reboarding Normal Curling
  - Permanent Curling
  - Pemring
  - Hair Colouring
  - Five Type of Hair Cutting
  - Hot Oil Massage



- முக அழகுக் கலை (Facial)
  - Gold, Silver, Pearl, Aroma, Banjaras
  - Natural, Normal Facials Face Pack
  - Pedicure, Menicure, Eye Brow Thereading, Waxing
  - தமக்குத்தாமே Facial செய்தல்
- Bridal Dressing
  - இந்து, கிறிஸ்தவ மணப் பெண் அலங்காரம்
  - Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர், குஜராத்தி, மடிசார்
  - சிங்கள முறையிலான சேலை அணியும் முறையும் பயிற்றுவிக்கப்படும்.
  - Nail Art, Mehendi, Face Art



மேலதிக விபரங்களுக்கு:-
T.P:-0776376683, 0214909274
19, கஸ்தூரியார் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உதயன் பத்திரிகைக்கு அருகாமை)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவபாதசுந்தரம் கோணேஸ்வரி



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி **சிவபாதசுந்தரம் கோணேஸ்வரி** நேற்று ஞாயிற்றுக்கிழமை (21.04.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், அன்னபூரணம், சொர்ணாம்பிகை, குலசிங்கம் மற்றும் பொன்னம்மா ,நகுலாம்பிகை, கந்தலிங்கம், சிவநாதன், சந்திரா ,தேவராணி, தருமராணி, செல்வநாயகி, ஜானகி ஆகியோரின் அருமைச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (மலேசியா),காலச்சென்ற திருஞானசம்பந்தர் மூற்றும் சிவபாக்கியம் காலஞ்சென்ற இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனியும்,

சிவாஸ்கரன் (கணனி பொறியியலாளர்,யாழ்.பல்கலைக்கழகம்), ஸ்ரீகரன் (UNHCR) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவரஞ்சினி (சிரேஷ்ட விரிவுரையாளர், முகர்மைத்துவ பீடம்,யாழ்.பல்கலைக்கழகம்),ஸ்ரீரஞ்சினி (பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அருமை மாமியாரும்,தசிகரன்,ரிசிகரன், வைஷ்ணவி, லக்ஷயா,மானுஷா,சுபிட்ஷா,நிதுசகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (22.04.2013) பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில், நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/1C ,திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(2428)

தகவல்
குடும்பத்தினர்.



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:30.12.1938
மறைவு: 23.03.2013

## அமரர் திரு. பொன்னையா சதாசிவம்

நீண்டதுாரம் நீங்கள் எமைவிட்டு
சென்றாலும்
நெஞ்சத்துள் நிறைந்து நியமாக
வாழ்வீர்கள்
எண்ணங்கள் முழுவதும் நிறைந்த
குலவிளக்கே!
என்றென்றும் உங்கள் நினைவுகள்
வாழ்ந்திடுமே.

23.03.2013 ஆம் திகதி அன்று இறைபதம் எய்திய எமது அன்புத்தந்தையின் இழப்பில் துயருற்றிருந்த வேளை ஆறுதல் கூறி சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

22.04.2013 ஆம் திகதி இன்று திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் தந்தையின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்:- மனைவி-திலகவதி
பிள்ளைகளான
கணேசமூர்த்தி, ஸ்ரீகரன்,
கௌரி, கோதை, ரேவதி,
தயாகரன்

தடுவன்,
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

(C-3076)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஒற்றுமை

ஒரு ஊரிலே அண்ணன், தம்பி என இரு சகோதரர்கள் இருந்தனர்.

அவர்களின் தந்தையார் அவர்களுக்கு என ஒரே ஒரு மாமரம், ஒரேயொரு ஒரு பசுமாடு, ஒரே ஒரு போர்வை ஆகியவற்றை மட்டும் சொத்தாக விட்டுச் சென்றார்.

இந்த மூன்றையும் அவர்கள் இருவரும் ஆளுக்கு ஆள் பாதியாக பிரிக்க வேண்டுமென பாகப்பிரிவினை.

இதை எப்படி பாகம் பிரிப்பது? எப்படி பங்கு போட்டுக் கொள்வது.

இதிலே அண்ணன்காரன் ஒரு மக்கு. என்ன சொன்னாலும் தலையாட்டிக்கொண்டு போவான்.

தம்பிக்காரன் சற்று புத்திசாலி. இருந்தாலும் அந்த புத்திக் கூர்மையைத் தப்பாகப் பயன்படுத்தக் கூடியவன்.

ஒருநாள் அந்தத் தம்பிக்காரன் அண்ணனிடம் சொன்னான்.

''அண்ணாச்சி! எங்கள் தந்தை நமக்காக விட்டுச் சென்ற சொத்தை நாம் இருவரும் ஒற்றுமையாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அதற்காக ஊரை அழைத்து பஞ்சாயத்து வைக்க வேண்டிய தேவை இல்லை''என்றான்.

''சரி தம்பி... அப்படியென்றால், நீயே அதைப் பங்கு போடு'' என்றான் அண்ணன்.

தம்பிக்காரன் சற்று புத்தி கூடியவன் அல்லவா... எதற்கும் யோசித்தான். அதன்பின் கூறினான்.

''அண்ணாச்சி... நீங்கள் வயதில் மூத்தவன்... அதனாலே அந்த மூன்று விடயத்திலேயும் உங்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதுதான் நியாயம்.

முதலில் அந்த மாமரத்தை எடுத்துக் கொள்வோம். அதன் அடிப்பாகம் வலுவானது. ஆதலால் அந்த மரத்தின் பாதிக்குக்கீழே உள்ளதெல்லாம் அதாவது வேர் உட்பட அடிப்பாகம் பூராகவும் உங்களுக்கு! மேல் பாகம் வெறும் கிளையும் இலையுமாக இருக்கிறது... அது எனக்கு இருக்கட்டும்...

அடுத்தபடியாக இருப்பது அந்தப் பசுமாடு, எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். அதனாலே அந்த மாட்டின் தலைப்பக்கம் உங்களுக்கும்– பின்பக்கம் எனக்கும் இருக்கட்டும்.

அடுத்தது... அந்தப் போர்வை. அதைப் பகல் பூராகவும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். இரவு பூராகவும் நான் வைத்துக் கொள்கிறேன்'' என்று தம்பிக்காரன் தனக்கு ஏற்றால் போல் அறிவுரை கூறினான்.

விடயம் புரியாமல் ''சரி'' என்று கூறினான் அண்ணன்.

அதன்பின்னர் என்ன நடந்திருக்கும் தெரியுமா?...

அண்ணன்காரன் மாமரத்திற்கு உரம் வைத்து, தண்ணீர் பாய்ச்ச,... தம்பிக்காரன் சந்தோஷமாக பழத்தையெல்லாம் பறித்துக்கொண்டான்.

அதே மாதிரி...அண்ணன்காரன் பசுமாட்டுக்கு ...முன்பக்கம் தீனி வைத்து... புல்லுப் போட...தம்பிக்காரன் பின்பக்கம் பால் கறந்து தேநீர் சுவைத்தான்.

அண்ணன்காரன் பகல் பூராகவும் அந்த போர்வையை மடித்து வைத்திருக்கிறான்.

தம்பிக்காரன் சந்தோஷமாக இரவு பூராகவும் அதை வாங்கிப் போர்த்தித் தூங்கினான்.

இப்படியாக நாட்கள் நகர்ந்தன. இதை அயல்வீட்டுக்காரன் அவதானித்துவிட்டு, நடக்கும் சம்பவம் நியாயம் அல்ல என்பதை புரிந்து கொண்டான்.

உடனே அந்த அண்ணனை அழைத்து புத்தி புகட்டினான். இனிமேல் எப்படி நடக்க வேண்டும் என்று கூறினான். அவனும் ''சரி'' என்று தலையாட்டினான்.

அதன்பின்னர் என்ன நடந்தது தெரியுமா?

அண்ணன் மரத்திற்கு உரம் வைப்பதையும் நீர் பாய்ச்சுவதையும் நிறுத்த... மாமரம் பூக்கவும் இல்லை, காய்க்கவும் இல்லை... தம்பி முழிக்க ஆரம்பித்தான்.

ஒரு கோடரியை எடுத்து அண்ணன் அடிமரத்தை வெட்டினான். தம்பி பதறிப் போனான்...''என்னண்ணே இப்படி செய்கிறாய்'' என்றான் தம்பி.

''என் பங்கிலே நான் என்ன வேண்டுமென்றாலும் செய்வேன்... உன் பாகத்திலேயா நான் வெட்டியுள்ளேன்'' என்று சொன்னான்.

அதேமாதிரி மாட்டுத்தீனியையும், தண்ணீரையும் பசுவிற்கு நிறுத்தினான். பசு பால் தர மறுத்தது. தம்பி பால் தேநீர் தயாரிக்க தவித்துப் போனான்.

அதன்பின் போர்வையை நீரில் நனைத்துவிட்டு தம்பியிடம் கொடுத்தான். அவனால் போர்வையைப் போர்த்த முடியவில்லை.

அதன்பின்னர் அண்ணனிடம் உடன்பட்டு, நியாயமாக நடக்க ஆரம்பித்தான் அந்தத் தம்பி.

ஒற்றுமையாக வாழ்வதிலேயேயும் ஒரு ஒழுங்குமுறை வேண்டுமென்பது இதிலேயிலிருந்து புரிகிறது அல்லவா?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிய மெய்வல்லுநர் போட்டிக்கு முன்னாள் போராளிகள் தெரிவு

முன்னாள் போராளிகள் 12 ஆயிரம் பேர் இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்தனர். அவர்களில் 11 ஆயிரத்து 500பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர். அவர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படு கின்றன என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர தெரிவித்துள்ளார். அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், புனர்வாழ்வு பெற்றுள்ள விடுதலைப் புலிகள் உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் பத்து வருடங்களுக்கு மீள செலுத்தும் வகையிலான இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா கடனுதவியும் வழங்கப்பட்டு வருகின்றது. புனர்வாழ் பெற்றுள்ள இவர்களை அரசாங்கம் புதிய வாழ்க்கை முறைக்குள் கொண்டு செல்வதற்குத் தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது.

புனர்வாழ்வு பெற்றுள்ள 180 பேரை அடையாளம் கண்டு அவர்களுக்கு சுகததாச விளையாட்டரங்கில் பல்வேறு விளையாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதில் தேசிய மட்ட குறி பார்த்து சுடும் போட்டியில் 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஆசிய மெய்வல்லுநர் போட்டிகளுக்கும் செல்லவுள்ளனர்.

அதேபோன்று கராத்தே, கபடி போன்ற பல்வேறு விளையாட்டுக்களிலும் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களும் இந்த போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

பயங்கரவாத வன்செயல் காரணமாக உயிர்களை இழந்து காயமடைந்து தொழில் பாதிக்கப்பட்ட சொத்துக்களை இழந்து அங்கவீனமடைந்தவர்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை நாம் படிப்படியாக வழங்கி வருகின்றோம்.

இதற்காக விண்ணப்பித்த ஏனையோருக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நட்ட ஈட்டு கொடுப்பனவுகளை வழகுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2013 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 200 மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செ தார். அதில் தற்போது 32 மில்லி யன் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளன என்றார். (அ-2)

# இராசி பலன்

22.04.2013
(சித்திரை 09, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
ஏகாதசி காலை 6.24 மணிவரை
துவாதசி பின்னிரவு 6.01 மணிவரை
பூரம் மாலை 6.24 மணிவரை
இராகுகாலம் 7.31-9.01 மணிவரை
சுபநேரம் 12.01-1.31 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க நினைப்பீர்கள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** பணிபுரியும் இடத்தில் பெரும் புகழும் கூடும், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், வாகன யோகமுண்டு, தனவரவில் இருந்த தடைகள் அகலும்

**மிதுனம்** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சகோதர ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும், கௌரவமான நாள்.

**கடகம்** கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரச் செய்தி வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் துணை புரிவர், திடீர் பயணம் உருவாகும், வழிபாட்டால் சிறப்பினை காணவேண்டிய நாள், குடும்ப பிணக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள்.

**கன்னி** தொழில் நலன் கருதி ஊர் மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலம் கிடைக்கும்.

**துலாம்** திடீர் பணவரவால் மகிழ்ச்சி அடைவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம், அந்தஸ்து உயரும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வருவர், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், போசன நன்மையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** தடைப்பட்ட திட்டங்கள் கைகூடும், பூர்வீக சொத்து தகராறுகள் சுமுகமாக முடியும், தொழில் ரீதியாக முக்கியமான புள்ளிகளை சந்திப்பீர்கள், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாடுகளால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு, குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** ஆரோக்கியமான நாள், நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள், நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

வளவன்

# வரி செலுத்துவதற்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நிதி அமைச்சின் வழிகாட்டலின்கீழ் இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் நடத்தப்படும் வரி செலுத்துவதற்கான வரி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பிரதி ஆணையாளர் பா.சிவாஜி தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் பிரதான வரிகளான வருமான வரி, தேசத்தை கட்டியெழுப்பும் வரி, பெறுமதி சேர் வரி மற்றும் முத்திரைத் தீர்வை போன்றவற்றுக்கான போதியளவு விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

எனவே பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் தொண்டைமானாறு பிரதேசங்களிலுள்ள வர்த்தகர்கள், வரி செலுத்துவோர், கணக்காய்வாளர்கள், வரி செலுத்த தம்மை பதிவு செய்ய விரும்புபவர்கள், மாணவர்கள், வரி பற்றிய அறிவைப் பெற விரும்பும் பொதுமக்கள் அனைவரையும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பலனடையுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 120 | 100 |
| தக்காளி | 50 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 50 | 50 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 140 | 140 |
| பூசணி | 30 | 40 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 35 | 30 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 150 | 80-160 | 100-140 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 110 | 90 | 120 | 80 |
| லீக்ஸ் | 130 | 160 | 140 | 120 |
| பீற்றூட் | 60 | 30 | 60 | 60 |
| கறிமிளகாய் | 90 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 500 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 50 | 30 | -- |
| கீரை - 1 பிடி | 15 | 15-20 | 30 | 30 |
| தேசிக்காய் | 80-100 | 70 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தியிலும் முற்பகல் 11 .30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை பலாலி வீதி சந்திக்கு அருகாமையிலுள்ள அம்மன் வீதியிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை ஜனசக்தி சன சமூக நிலையத்திலும் முற்கல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை சிவன் புதுவீதியில் அமைந்துள்ள சுகாதார கல்வி மையத்திலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)




நன்றி :- மிரர்

# மஹோற்சவம்

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

பன்னிரண்டு தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தீர்த்த திருவிழா 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கும் வைரவர் பூசை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ)

# முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம்

(சித்தங்கேணி)

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பட்டுக்குடைத் திருவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 11.30 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணிப்பதும் இடம் பெறவுள்ளது. தொடர்ந்து 25 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும் என ஆலய தர்மகர்த்தா கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (அ-3-17)

# போட்டி முடிபுகள்

(சாவகச்சேரி)

புத்தாண்டை முன்னிட்டு 523 ஆவது படைப் பிரிவினரால் தென்மராட்சி ரீதியில் நேற்றுக்காலை விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வுகளில் இருபாலாருக்குமான சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டம் ஆகிய போட்டிகள் இடம்பெற்றன.

இதில் இவற்றில் வெற்றி பெற்றவர்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**சைக்கிள் ஓட்டம் (ஆண்)**

பா.பாலகுமாரன், சுதர்சன், எஸ்.சஜீபன்

**சைக்கிள் ஓட்டம் (பெண்)**

வி.பத்மா, ரி.பர்மிளா, ஏ.கனிசா

**மரதன் ஓட்டம் (ஆண்)**

ரி.ஜெயக்குமார், பி. ஜெயானந்தன், பி.நகுலேஸ்வரன்

**மரதன் ஓட்டம் (பெண்)**

பியூலா, ரி.சினேந்தனி, தர்ஷிகா

இந்நிகழ்வுகளை 523 ஆவது படைப் பிரிவின் பிரிகேடியர் கொமாண்டர் அத்துலமாரசிங்க ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ-3-29)

# சா.த. பரீட்சை முடிபில் வடமராட்சி கல்வி வலயம் பின்தங்கியுள்ளது

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்தில் அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் முடிபுகளின்படி வடமராட்சியின் கல்வி நிலை கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது பின்னடைவை சந்தித்துள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கவலை தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை பெறுபேறுகளின்படி வடமராட்சி வலயத்தில் கணித பாடத்தில் 600 மாணவர்கள் சித்தியடையவில்லை என்றும் தமிழ் மொழிப் பாடத்தில் 300 மாணவர்கள் சித்தியடையவில்லை என்றும் சில மாணவர்கள் தமிழ்மொழியை விட ஏனைய பாடங்களில் ஏ பெறுபேறு பெற்றிருந்த போதிலும் தமிழ்மொழியில் சாதாரண பெறுபேறு மட்டுமே பெற்றிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம் எனவும் தெரிவித்தார்.

கடந்த வருடங்களில் க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தி எய்திய ஹாட்லிக் கல்லூரியில் 40 மாணவர்கள் மட்டும் பொறியியல் பிரிவிற்கு தகுதியுடையவர்களாக இருந்த போதிலும் இம்முறை வடமராட்சி வலயக் கல்வி பெறுபேறுகளின்படி 66 மாணவர்கள் மட்டுமே தேர்ச்சி அடைந்துள்ளனர்.

இப்பெறுபேற்றின்படி தமது வலயம் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கி இருப்பதாக கவலை வெளியிட்டுள்ளார்.

தொலைக்காட்சியைப் பார்ப்பதனால் மாணவர்கள் தமது கல்வியைத் தொலைத்து விட்டார்கள் சினிமாப்படம், தொடர்நாடகம் இவற்றிலேயே மாணவர் சமூகமும் பெற்றோரும் மூழ்கிப்போயுள்ளனர்.

எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்.

உயர்தர வகுப்பு பரீட்சை வரை தங்கள் பிள்ளைகள் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-10)

# சதுரங்கப் போட்டி முடிபுகள்

தென்மராட்சிக் கல்வி வலய இவ்வா ண்டுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்ஸிள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**15 வயதின் கீழ் (ஆண்)**

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி , யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியால யம், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியால யம்

**19 வயதின் கீழ் (ஆண்)**

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. , மீசாலை வீரசிங்கம்ம.வி.

**19 வயதின் கீழ் பெண்**

யா/கொடிகாமம் திருநாவுக்கரசும.வி., யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/ விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் .

மேற்குறித்த வெற்றியாளர்கள் வடமாகாண சதுரங்க சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-19)

# குப்பைக்கு வைத்த நெருப்பு காணி முழுவதும் பரவியது



குப்பைக்கு வைக்கப்பட்ட தீ காணி முழுவதும் பரவி பெரும் தீப்பரவல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணம் ஆறுகால் மடப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் தென்னை மரக் காணியின் உரிமையாளர் காணியைத் துப்புரவு செய்து விட்டு குப்பைகளைக் கூட்டி தீ வைத்துள்ளார். தீ வைக்கப்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் குப்பைக்கு வைக்கப்பட்ட தீ காற்று வேகமாக வீசியதன் காரணத்தால் அருகில் குவித்து வைக்கப்பட்டிருந்த கோம்பைகள், ஓலைகள்,மட்டைகள் மற்றும் பாளைகள் என்பவற்றில் வேகமாக பரவி காணி முழுவதும் பரவ ஆரம்பித்துள்ளது. உடனடியாக அவ்விடத்துக்கு விரைந்த காணி உரிமையாளர் வாளியில் தண்ணீரை எடுத்து ஊற்றி தீயை அணைக்க முற்பட்டுள்ளார் .

எனினும் வேகம் தணியாத தீ சுவாலைவிட்டு எரியத் தொடங்கியது. இதனால் ஒரு கட்டத்தில் தீயை அணைக்க முடியாது போகவே அயலவர்களும் இணைந்து ஒரு மணி நேரம் போராடிய பின் தீ கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது. இத்தீ அவ்விடம் முழுவதும் பரவி விடுமோ என்ற பதற்ற நிலை அங்கே காணப்பட்டது. (அ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்ட போட்டி இன்று

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர்கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி தொடக்கம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இருபாலாருக்குமான இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புகின்ற கழகங்கள் உரிய நேரத்தில் மைதானத்திற்கு சமூகம் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அறிவித்துள்ளார். (அ-3-23)

# பாம்பு தீண்டியநபர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

நாகபாம்பு தீண்டிய நபர் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் .

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கரவெட்டி ஸ்ரீ நாரதா வீதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மனோகரன் (வயது 40) என்ற நபர் வீட்டில் படுக்கை அறையில் உறங்கிக் கொண்டிருந்த வேளை நாகபாம்பு தீண்டியுள்ளது. விழித்தெழுந்த நபர் அப்பாம்பினை பிடித்த வேளை அது வலதுகையிலும் தீண்டியுள்ளது.

இதனையடுத்து இவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மயக்க நிலையில் இருந்த அவர் மீளாமையால் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-3-60)




# இளைஞர் கழக சம்மேளன வலைப்பந்தாட்டப் போட்டி

(தனங்கிளப்பு )

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் 15 இளைஞர் கழக சமமேளங்களுக்கு இடையில் இருபாலாருக்குமான வலைப்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் அனைத்து பிரதேச இளைஞர் கழக அணிகளையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட இள்ளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் தெரிவித்துள்ளார். (அ-3-37)

# சந்திரிகாவுடன் தொடர்புடையவர்கள் குறித்து ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்களையும் அவர்களின் இரகசிய செயற்பாடுகளையும் ஆராய அரசாங்கம் விசேட குழுவொன்றை அமைத்துள்ளது.

அரசாங்கத்தில் உள்ள இளம் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் சிரேஷ்ட உறுப்பினர்களின் ஆலோசனையின் பேரில் செயற்படவுள்ளதாகவும் அரசாங்கத்தின் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுடன் இரகசிய சந்திப்புக்களை மேற்கொண்டு இருந்ததாகவும் அதனடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியைக் களமிறக்கியதாகவும் அண்மைக் காலமாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலையிலேயே அவர்கள் பற்றி ஆராய விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கையொன்றை அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றிடம் சமர்ப் பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலில்லையாம்

### ஊடக அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

உயிர் அச்சுறுத்தல் உள்ளதாகத் தெரிவித்து நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள் மீளவும் நாடு திரும்ப முடியும் என ஊடக அமைச்சின் செயலாளர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை. இதனால் ஊடகவியலாளர்கள் நாடு திரும்ப முடியும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்ட ஊடகவியலாளர்கள் நாடு திரும்பக்கூடிய சூழ்நிலையே காணப்படுகின்றது. அரசாங்கம் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தவோ அல்லது அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ இல்லை.

எந்தவொரு ஊடகவியலாளரையும் அரசாங்கம் கறுப்புப் பட்டியலில் இடவில்லை. ஊடக நிறுவனங்களோ அல்லது ஊடகவியலாளர்களோ அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருவதாக இதுவரையில் தகவல்கள் கிடைக்கவில்லை.

கடந்த சில மாதங்களில் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தெரிவித்து இரண்டு ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றார்.

இதேவேளை, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கூடிய நிலையில் ஊடக அமைச்சு இல்லை என சுதந்திர ஊடக அமைப்பின் அழைப்பாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளதுடன் சுனந்த தேசப்பிரிய, உபாலி தென்னக்கோன், போத்தல ஜயந்த, பிரசன்ன பொன்சேகா மற்றும் சனத் பாலசூரிய போன்ற ஊடகவியலாளர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிச் சென்றனர் என்று சுட்டிக்காட்டினார்.

அத்துடன் வெறும் வார்த்தைகளுக்கு மட்டும் இந்த உறுதிமொழி வழங்காது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நாட்டை விட்டு வெளியேறிய ஊடகவியலாளர்கள் நாடு திரும்புவார்கள் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# பாலியாறு மயானத்தை புனரமைக்க கோரிக்கை

(மல்லாவி)

மல்லாவியில் உள்ள திருநகர், வளநகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் இந்து, கிறிஸ்தவ மக்களின் பாவனையில் உள்ள பாலியாற்று இந்து, கிறிஸ்தவ மயானங்கள் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவதற்குரிய அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாகவும் இதனைப் புனரமைத்துதர வேண்டுமெனவும் துணுக்காய் பிரதேச சபையினரிடம் கிராமமக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

மயானத்திற்கு செல்லும் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட வீதி குன்றும் குழியுமாக இருப்பதுடன் இறுதிக் கிரியைகள் நிறைவேற்றுவதற்குரிய பொதுமண்டபம் மற்றும் சடலங்களை எரியூட்டும் கொட்டகை என்பன இல்லாதிருப்பதுடன் மயானத்தை சூழ உள்ள பகுதிகள் பற்றைக்காடுகள் மூடி காணப்படுகின்றன. மயானத்திற்கு முன்பாக பாரிய கழிவு வாய்க்கால் ஒன்று காணப்படுகின்றது.

மழை காலங்களில் இவ்வாய்க்கா லில் வெள்ள நீர் மூடிப்பாயும் போது சடலங்களைக் கொண்டு செல்ல முடியாதுள்ளது. இம்மயானத்தை அண்டிய பகுதியிலேயே கிறிஸ்தவ மக்களது நல்லடக்க சேமக்காலையும் உள்ளது.

எனவே இந்து, கிறிஸ்தவ மக்களின் வாழ்வுடன் பின்னப் பிணைந்துள்ள இம்மயானங்களை மிக விரைவில் புனரமைத்து தர வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததாகக் கூறினர். (அ-3-15)


Soft View Computer Center
கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள்
புதிய வழி முறைகளுடன் ஆரம்பம்
102,Main Street, Jaffna. E.C Colin
T.P :- 021 222 4885, 0779053545
யாழ் திருமறைக் கலாமன்றம் அருகாமையில்
(இரவு நேர வகுப்புகளும் நடைபெறுகின்றன) இரவு 8.30 வரை
(சு/3072)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>உயரம்: 5'7"<br>கி.பா: 27<br>தகைமை/தொழில்: A/L கல்வியியற் கல்லூரி டிப்ளோமா தகவல் தொழில்நுட்பம் (ஆசிரியர்)<br>தொ.இ: B -1610 | பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>1இல் செவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/ தொழில்: Nurse<br>தொ.இ: G -1616 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 4<br>உயரம்: 5'<br>கி.பா: 39, 1 இல் செவ்<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>தொ.இ: B -1611 | பிறப்பு: 1975 இந்து சிவகோத்திரம்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 6'<br>கி.பா: 33.25, 2 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BA நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்<br>தொ.இ: G-1617 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 18.25<br>தகைமை/ தொழில்: A/L, பிரான்ஸ் (PR)<br>தொ.இ: B -1618 | பிறப்பு: 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: BA, MEd ஆசிரியர்<br>தொ.இ: G -1619 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்:IT Software Engineer பிரான்ஸ் (PR)<br>தொ.இ: B -1620 | பிறப்பு: 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்: 5'1"<br>கி.பா:72, 1 இல் செவ்<br>தகைமை/ தொழில்: BA பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: G -1621 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



திடநம்பிக்கையுடனான முதலீட்டிற்கு...

பங்குச் சந்தையில் முதலீடு செய்ய சரியான முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

முதலீட்டுக்கான அறிவு
யாழ்ப்பாணம்

2013 ஏப்ரல் 27 மற்றும்
மே 04, 11, 18, 25 ஆம் திகதிகளில்
மு.ப 09.00 முதல் நண்பகல் 12.00 வரை
கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம்
யாழ்ப்பாணக் கிளை

பங்கு முதலீடு பற்றிய அறிமுகம்
நிதிக்கூற்றுக்களை விளங்கிக் கொள்ளல்
பங்குகளைத் தெரிவு செய்தலும் தீர்மானமெடுத்தலும்
பங்குகளில் முதலீடு செய்தல்

மொழி மூலம்: தமிழ்
பதிவுக் கட்டணம் ரூபா. 500/-

கொமர்ஷல் வங்கிக் கணக்கு இல: 1416075401 இல் வைப்பிலிட்டு, பற்றுச்சீட்டை 021 2221466 என்ற இலக்கத்திற்கு பெக்ஸ் செய்யவும். அல்லது www.cse.lk என்ற எமது இணையத்தளத்தில் பதிவு செய்யவும்.

'மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:
021-2221455, 0777-822014

CSE COLOMBO STOCK EXCHANGE

(சி/3054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்- முஸ்லிம் மக்களின் உறவைப் பலப்படுத்துங்கள்

## யாழ்.முஸ்லிம் அ.பு. அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடைபெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஆற்றிய விசேட உரையை வரவேற்பதாக யாழ்.மாவட்ட முஸ்லிம் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக குறித்த அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே குறித்த அமைப்பின் செயலாளர் எம்.எம்.சபூர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையின் மூலம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹலால் பிரச்சினை, முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா எதிர்ப்பு, பள்ளிவாசல்கள் தாக்குதல்கள் மற்றும் முஸ்லிம்களின் வியாபார நிலையங்களின் தாக்குதல் சம்பவங்கள் போன்ற முஸ்லிம்களுக்கு எதிரான சம்பவங்கள் பொதுபலசேனா,ராவணபலய போன்ற அமைப்புக்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான இவ் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு முஸ்லிம் அமைச்சர்களும் தேசிய முஸ்லிம் பேரவையும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதற்கென பாராளுமன்ற தெரிவுக்குழுவும் ரட்ணசிறி விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தால் தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். எனினும் இன்றுவரை அறிக்கை வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்களையும் பிரச்சினைகளையும் முஸ்லிம் அமைச்சர்களோ பாராளுமன்ற உறுப்பினர்களோ பாராளுமன்றத்தில் பேச முன்வரவில்லை. எனினும் அவர்களுடைய வேலையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்செயல்கள், அவதூறு பேச்சுக்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என தனது விசேட கூற்று உரையின் போது அரசாங்கத்தைக்கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்விசேட கூற்று உரையானது முஸ்லிம்களின் மகிழ்ச்சிக்குரியதாகவும் வரவேற்பதற்குரியதாகவும் அமைவதோடு இது தமிழர்-முஸ் லிம்களின் உறவை வளர்ப்பதற்கான உரமூ ட்டும் நடவடிக்கையுமாகும் என்பதும் குறிப் பிடத்தக்கது.

எனவே முன்னைய காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை மறந்து தமிழர்களும் முஸ்லிம்களும் ஒற்றுமைப்பட வேண்டிய காலகட்டத்தில்நாம் இருக்கின்றோம்.

இதேவேளை முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி விக்னேஸ்வரன் பொது வைபவங்களில் உரையாற்றும் போது தமிழர் முஸ்லிம் ஒற்றுமையைக் குறிப்பிடத்தவறுவது இல்லை.

நாம் இனிமேலும் தமிழர் முஸ்லிம் உறவை வளர்ப்பதற்குப் பின்னிற்போமானால் இன்னும் பயங்கரமான சம்பவங்கள் இரு சமூகங்களுக்கும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே, ஏற்படப் போகும் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கு தமிழ் முஸ்லிம் ஒற்றுமை மிக அவசியமாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

## பேருந்தும் ரயிலும் நேருக்கு நேர் மோதின

(கொழும்பு)

மக்கொனைக்கும் பேருவளைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ளமாகல் கந்த கடலோர புகையிரத மார்க்கத்தில் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்தும் புகையிரதமும் நேருக்கு நேர் மோதியதில் 20 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

கண்டியிலிருந்து இறுதிக்கிரியை ஒன்றுக்காக பயணித்தவர்களின் பேருந்து கொழும்பிலிருந்து காலி நோக்கி பயணித்த புகையிரதத்துடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு இவர்களில் சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார். (அ-2)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறும்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மேமாதத்தின் பின்னர் ஆளும் கட்சியில் நீடிப்பதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படவுள்ளது. முஸ்லிம் மக்கள் எதிர் நோக்கிவரும் நெருக்கடி நிலைமைகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனினும் அரசாங்கம் இதுவரையில் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே தொடர்ந்தும் ஆளும் கட்சியில் நீடிப்பதா, இல்லையா என்பதனை விரைவில் தீர்மானிக்கும் காலம் நெருங்கிவிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (அ-2)

## பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வடமாகாண நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் ஆணையாளர் செல்வி உமா தங்கவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 352 சிறுவர் இல்லங்கள் இயங்கி வருவதாகவும் வடக்கில் மாத்திரம் 78 சிறுவர் இல்லங்கள் உள்ளன என்றும் இவற்றில் 4 ஆயிரம் சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள சிறுவர் இல்லங்களில் 80 வீதமானவை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 20 வீதமானவை பதிவு செய்யப்படாமல் இயங்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பதிவு செய்யப்படாமல் இயங்கும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கான நடவடிக்கைகளை நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்களம் மேற்கொண்டு வருவதாகவும் தற்போது பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களை பாடசாலைகளுக்கு இடம்மாற்றுவதில் உள்ள பிரச்சினைகள் கவனத்தில் எடுக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## 3 புதிய நெல்லினங்கள் இலங்கையில் அறிமுகம்

(கொழும்பு)

விவசாயத் திணைக்களத்தின் அம்பாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிறுவகத்தினால் புதிய நெல் வகைகள் 3 அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.306, 405 பாஸ்மதி வகை இரண்டும் மற்றும் 05-1382 நாடு என்பனவே இதன் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ள நெல்லினங்களாகும். இவை பிஸ்கட் உற்பத்திக்கும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமை முக்கிய அம்சமாகும்.

இவற்றிலே 306 நெல் வகையானது 3 மாத வயதிற்கு உட்பட்டதாக விளங்குவதுடன் வெள்ளை நிறம் கொண்ட நறுமணம் வீசக்கூடிய ஒரு வகையாகவும் விளங்குகின்றது.

450 வகையானது லங்கா சமுர்தி என்றழைக்கப்படுகின்றது. இவை நெல் மீது ஏற்படக்கூடிய பல்வேறு நோய் எதிர்ப்பு சக்திகளைக் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

உயர் அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பிஸ்கட் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கும் புதிய நெல் வகை பயன்படுகின்றது. புதிய நெல் வகை பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதே விவசாய அமைச்சின் நோக்கமாகும். (அ-2)

## அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாது- பொலிஸ் தரப்பு


(கொழும்பு)

இலங்கை பொலிஸ் நிலையங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவோர் மீது சித்திரவதைகள் இடம் பெற்று வருவதாகவும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் துன்புறுத்தப்படுவதாகவும் 2012 ஆம் ஆண்டுக்கான மனிதவுரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கையில் அமெரிக்க அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. இக்குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என பதில் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமை மேம்பாடு தொடர்பில் பொலிஸாருக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக இவ்வாறான எவ்விதக்குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படவில்லை .

கைதிகள் மீது சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டால் அது தொடர்பில் மனித உரிமை ஆணையகத்தில் அல்லது நீதிமன்றில் முறைப்பாடு செய்ய முடியும் என்றார். (அ-2)



குட்டிசுட்டி மகிழ்நெறிக் கல்வி நிலையமும் Guide Instutite நிறுவனமும் இணைந்து நடத்திய இல்ல விளையாட்டுப்போட்டி நேற்று முன்தினம் யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் நிகழ்வில் வெற்றியீட்டிய சிறார்கள் சான்றிதழ்களுடன் விருந்தினர்களுக்கு அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: எஸ்..ஆர் கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய குழுவினரிடம் தனிநாட்டு கோரிக்கையை முன்வைக்கவில்லை

## மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப்

(கொழும்பு)

**தனி ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு இந்தியாவிடம் கோரியதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை என மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் தெரிவித்துள்ளார்.**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து தனி ஈழக் கோரிக்கைக்கு ஆதரவளிக்க வேண்டுமென மன்னார் பேராயர் கோரியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே அவர் அதனை மறுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய கொன்சேல் காரியாலயத்தின் அழைப்பின் பேரில் நான் , இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தேன்.

ஆனால் ஈழக் கோரிக்கை தொடர்பில் நான் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடுவதற்கு ஒருபோதும் அஞ்சப் போவதும் இல்லை.

நான் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அளித்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை பிளவு படுத்துமாறு கோரிக்கை விடுக்கவில்லை என்றார். இவ்விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட வன்னிக் கட்டளைத் தளபதி பொனிபஸ் பெரேரா பிரிவினை வாதத்தைத் தூண்ட வேண் டாம். பிரிவினை வாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுவது சட்ட விரோதமானது. நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மேலும் மன்னார் பேராயர் இராயப்பு ஜோசப் உள்ளிட்ட 100 மதகுருமாரை அழைத்து பொனிபஸ் பெரேரா இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

வன்னிக் கட்டளைத் தளபதியின் இந்தக் கருத்தைப் பல மதகுருமார் ஏற்றுக் கொண்டதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாட்டுக்குள் தனிநாடு என்ற சிந்தனை கனவாகவே கருதப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில் தனிநாட்டுக் கோரிக்கை நியாயமற்றது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# ஜோதிடரின் ஆலோசனைக்கமைய வடக்கு மாகாண தேர்தலாம்

(கொழும்பு)

ஜோதிடரின் ஆலோசனைக்கமைய வட மாகாண சபைத் தேர்தல் தினம் தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் எவ்வாறெனினும் தேர்தல் தினம் பற்றி ஜோதிடருடன் கலந்தாலோசித்தே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் வெற்றியீட்டக் கூடிய தினமொன்றை ஜோதிடர் வழங்குவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிகரெட், மதுபான விலை அதிகரித்த போது எவரும் முறைப்பாடு செய்யவில்லை. ஆனால் தற்போது மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்ட தற்கு எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தேசிய அபிலாசைகளை வெளிப்படுத்தும் நபரே வடக்கு முதலமைச்சராக வரவேண்டும்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு மாகாண சபை முதலமைச்சராக வரக்கூடியவர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான கௌரவமான தீர்வை பெற்றுக் கொடுக்கக் கூடிய தலைமைத்துவத்தை வழங்குபவராகவும் நேர்மையான, நீதியான ஒருவராகவும் இருக்க வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின் றனர். அத்துடன் யார் வரவேண்டும் என்று அவர்கள் கனவு காணவில்லை என பா.உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வடமாகாண சபை தேர்தல் நடைபெறும் என குறிப்பிடும் நிலையில் இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்,

வடமாகாண சபை முதலமைச்சராக யார் வர வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாப்பவரா இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள்.

பதவியின் பொருட்டு கதிரையை அலங்கரிப்பதற்காவோ அரசாங்கத்திற்கு சார்பானதாகவோ அல்லது உலகம் சொல்வதைச் செய் பவராகவோ இருப்பவரைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை.

18 வருடங்களாக இணைந்திருந்த வட கிழக்கு பிரிக்கப்பட்ட நிலையில் வட மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றா தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என் உலகம் எண்ணுகின்றது. இவ்வாறான நிலை யில் முதலமைச்சராக வருபவர் வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திக்கும் போது தமிழ் மக்களின் போராட்ட நியாயப்பாட்டை எடுத்துரைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டுவதற்கான தலைமைத்துவத்தை வழங்கும் ஒருவராக இருக்க வேண்டும்.

சுய நிர்ணய உரிமை, மரபு வழி தாயகம், தமிழ் தேசியம் என்பன பேசாப் பொருட்களாக மாறி வருகின்றன. எனவே தமிழ் மக்களின் பாராம்பரியங்களைப் பேணி தங்களைத் தாங்களே ஆளக்கூடிய, வெளிநாட்டுக் நிதியைக் கையாள கூடிய அதிகாரம் உள்ள தீர்வு குறித்து பேசுபவராக இருக்க வேண்டும். 18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் திவிநெகும மூலம் மாகாணசபைகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டு வரப்பட்ட போது இருந்த முக்கிய அதிகாரங்கள் எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் நிரந்தர தீர்வுக்கு கொண்டு வர முயற்சிக்கும் ஒருவ ராக இருப்பதும் அவசியமாகின்றது.

தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடிய அதிகாரம் உள்ள தீர்வாக, காணி, பொலிஸ், நிதி அதிகாரங்களை கையாளக் கூடியதாக நீடித்து நிலைக்கும் கௌரவமான தீர்வையே எதிர்பார்க்கிறார்கள்.

இத்தீர்வினால் நாடு பிளவுபடாது என, சிங்கள மக்களுக்கு எடுத்துரைத்து சிங்கள தலைவர்கள் உல்கிற்கும் இது தொடர்பில் தெளிவு படுத்தும் தன்மையும் இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்கள் நிரந்தர அரசியல் தீர்வுக்காக செய்யப்படும் நேர்மை, நீதியுள்ள ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள். மாறாக யார் வர வேண்டும் என்பது குறித்தெல்லாம் தமிழ் மக்கள் கனவு காண்வில்லை என்றார். (அ-2)

# அதிகாரிகளின் பதவிகளில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

இராஜதந்திர சேவையில் ஈடுபட்டுள்ள உயர் அதிகாரிகளின் பதவிகளில் திடீர் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

மத்திய கிழக்கு மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் கடமையாற்றி வரும் அதிகாரிகளின் பதவிகளிலேயே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினால் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் நோக்கில் இவ்வாறு மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

எதிர்வரும் இரண்டு, மூன்று மாதங்களில் முக்கிய பதவிகளில் பாரியளவு மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# இலங்கையர்கள் அழைத்து வரப்படுவர்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

சவுதியில் நிர்க்கதியாகியுள்ள இலங்கையர்களை தாயகத்திற்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரண்தெனிய தெரிவித்துள்ளார்.

தொழில் வாய்ப்பிற்கான அடையாள அட்டை கால அவகாசம் நிறைவடைந்து சவுதி அரேபிய ஜெட்டா நகரில் தங்கியுள்ள இலங்கையர்கள், அடுத்த வாரம் தொடக்கம் கட்டம் கட்டமாக தாயகத்திற்கு அழைத்து வரப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சவுதியில் உள்ள இலங்கை தூதரகம் சவுதி அரசாங்கத்துடன் இது தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.


சவுதி அரேபியாவுக்கு தொழில்வாய்ப்பிற்காக செல்லும் ஏனைய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுவது வழக்கம். அவற்றின் காலவரையறை நிறைவடைந்த நிலையில் 4 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் ஜெட்டா நகரில் தொழில்வாய்ப்பற்ற நிலையில் உள்ளனர்.

அண்மையில் சவுதி அரேபிய அரசாங்கம் குறித்த அடையாள அட்டை அற்றவர்களை தொழில்களில் இணைத்துக் கொள்ள கூடாது என்று தொழில் வழங்குநர்களுக்கு உத்தரவிட்டிருந்தது.

எனினும் தமக்கு நியாயம் கிடைக்க வேண்டியும் தொழில்வாய்ப்புக்கள் தரக் கோரியும் குறித்த பணியாளர்கள் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது அந்த நாட்டு பொலிஸாரினால் அவர்களுக்கு பலவித அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருந்தன.

ஆரம்ப தொழில் ஸ்தானத்திலிருந்து வெளியேறி இலங்கையர்கள் போன்றே இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் ஜெட்டா நகரில் தங்கியுள்ளனர் என்றார். (அ-2)



மகாவலி பிரதேசத்தில் அரச காணிகளில் குடியிருப்போருக்கு காணி உறுதிகள் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் வெலிஓயா சம்பத் நகரில் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு உயிர்களை பலியெடுத்த காதல்




மட்டக்களப்பு செங்கலடி நகரில் கடந்த வாரம் இடம்பெற்ற இரட்டைக் கொலைச் சம்பவம் மனிதாபிமானமிக்க அனைவரது மனதையும் நெகிழச் செய்துள்ளது. போர்ச் சூழல் ஓய்ந்த பின்னர் ஆயுத கலாசாரம் பஞ்சமாபாதக செயல்கள் அனைத்தும் நீங்கிவிடும் என எண்ணியிருந்த தமிழ் மக்கள் மத்தியில் இக்கொலைச் சம்பவம் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

செங்கலடி நகரம் சித்திரை புத்தாண்டு காலத்தில் களை கட்டுவது வழக்கம். அந்த பிரதேசத்தில் நாலாபுறத்திலுமிருந்தும் மக்கள் புத்தாண்டுக்கான பொருட்களை கொள்வனவு செய்யவரும் வர்த்தக மையமாக இப்பிரதேசம் அமைந்துள்ளது.

அன்று சித்திரை மாதம் 7 ஆம் திகதி நள்ளிரவு செங்கலடி- பதுளை வீதியில் இடம்பெற்ற





இரட்டைக் கொலைச் சம்பவம் வர்த்தகர்களையும் அந்த பிரதேசத்தையும் சோகத்துக்குள்ளாக்கியதோடு பெரும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

தனது சுயமுயற்சியினால் வர்த்தகத்தில் முன்னேற்றமடைந்து வந்த 47 வயதான சிவகுரு ரகு மற்றும் 41 வயதுடைய அவரது அன்பு மனைவி சுந்தரமூர்த்தி விப்ரா ஆகியோர் கூரிய ஆயுதங்களினால் படுக்கையறையில் வெட்டியும் குத்தியும் மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். செங்கலடி நகரைப் பொறுத்தவரை 24 மணி நேரமும் பொலிஸாரின் ரோந்து கண்காணிப்புக்குரிய நகர் என்று கூறமுடியும். அப்படியிருந்தும் இந்தப் படுகொலைச் சம்பவம் பாதுகாப்புத் தரப்பினரின் கண்களுக்குப் புலப்படாமல் இடம்பெற்றுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட வர்த்தகரான சிவகுரு ரகு கிரான் பிரதேசத்தைச் சேர்ந்தவர். செங்கலடியைச் சேர்ந்த விப்ராவை விரும்பி திருமணம் செய்தவர். இவர்களுக்கு வைஷ்ணவி (வயது 21), தலக்ஷனா (வயது16) என இரு புதல்விகள் உள்ளனர்.

இந்த இரு பெண்மக்களையும் மிகவும் அன்போடு வளர்த்து வந்தார்கள். ஆரம்பத்தில் சிறியளவில் வர்த்தகத்தை ஆரம்பித்த அவர், தனது மனைவியின் பக்க பலத்துடன் பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொண்டார். இவரது குடும்பத்தைப் பொறுத்தவரை ஒரு மகிழ்ச்சிகரமான சூழலைக் கொண்டது. ஆனால், அந்த மகிழ்ச்சியில் விதியின்


**குருவி மற்றும் அயன் சினிமா பாணியை பின் பற்றி இடம்பெற்ற படுகொலைகள்**

விளையாட்டு சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வர்த்தகரும் மனைவியும் படுக்கையறையில் கொடூரமாக கொல்லப்பட்டனர். பொலிஸார் சற்று நேரத்திலேயே இவ்விடத்திற்கு விரைந்த போதிலும் கொலையாளிகள் தொடர்பான எந்தவொரு தடயமும் கண்டெடுக்கப்படவில்லை. இதனால் இக்கொலைகள் முன்மாதிரியைப் பின்பற்றி நன்கு திட்டமிடப்பட்ட முறையில் இடம்பெற்றிருப்பதை உணரமுடிந்தது.

எனினும் குடும்ப உறவினர்களின் ஒத்துழைப்பின்றி இக்கொலைகளை செய்திருக்க முடியாது என்ற ஒரேயொரு துரும்பு மாத்திரமே புலனாய்வுத் துறையினருக்கு எஞ்சியிருந்தது. அந்த அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கிழக்குப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உள்ளிட்ட அதிகாரிகள் அதிகாலை வேளையிலேயே அவ்விடத்திற்கு வந்தனர். அதையடுத்து இராணுவம் மற்றும்



பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் மோப்ப நாய்கள் சகிதம் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். கொலையாளிகளின் தடயங்களைத் தேடினார்கள். தடயங்கள் கிடைக்கவில்லை. நாய்களை மோப்பம் பிடிக்க விட்டார்கள். அந்த நாய்கள் கொலையாளிகளைத் தேடி ஓடின. 'ஆனாலும் சம்பவ இடத்திலிருந்து 250 மீற்றரைக் கூட தாண்டவில்லை. மோப்ப நாய்களால் கூட கொலையாளிகள் சென்ற பாதை மற்றும் மறைந்துள்ள இடத்தை கூட துல்லியமாக அறிய முடியவில்லை.

எவ்வாறிருப்பினும் பொலிஸார் முதலில் குடும்ப உறுப்பினர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். அதன் மூல மேனும் பொலிஸாருக்கு துப்புத் துலங்கவில்லை. பின்னர் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கொழும்பிலிருந்து வருகை தந்து புலனாய்வுப் பணிகளை முடுக்கிவிட்டார்கள்.

ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காஞ்சன கொடகொம்பர தலைமையில் பொலிஸ் பரிசோதகர் கிரான் செனவிரட்ண, சார்ஜன்ட்களான நஜிமுடின், சறுக், ரபிக் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான



தாஹிர், அனுராத, புருசோத்தமன், வன்னிநாயக்க மற்றும் விதான ஆகியோரைக் கொண்ட விசேட பொலிஸ் குழுவொன்றும் விசாரணையில் ஈடுபட்டது. அதனையடுத்து ஓரிரு நாட்கள் கடந்த பின்னர் இளைய மகளின் காதல் விவகாரம் கசிய ஆரம்பித்தது.

இதையடுத்து சந்தேகப் பட்ட காதலனின் தொலைபேசி அழைப்புகள் கண்காணிக்கப்பட்டன. அதன் மூலமாக இத்துள் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவனொருவன் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து காதலன் மற்றும் அவரது நண்பரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் செங்கலடி மத்திய கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 16 வயதுடைய மாணவர்கள் என்பது மக்களுக்கு வியப்பை ஏற்படுத்தியது.

கொல்லப்பட்டவர்களது

**கல்லூரியிலும் ரியூசனிலும் வகுக்கப்பட்ட கொலைத் திட்டம்**

இளைய மகள் ரகு தலக்ஷனா, அவரது காதலன் சிவநேசராசா அஜந், அவரது நண்பர்களான புவனேந்திரன் சுமன் மற்றும் குமாரசிங்கம் நிலக்சன் ஆகியோரே சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டனர்.

பொலிஸ் விசாரணையையடுத்து ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி ரி.கருணாகரன் முன்னிலையில் இவர்கள் ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிபதியின் உத்தரவின் பேரில் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் (பாடசாலை மாணவர்கள் என்ற காரணத்தினால்) தனியான அறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் மூலம் பல்வேறு திகிலூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகளின் காதல் விவகாரத்தை விரும்பாத தந்தை ரகு பலமுறை எச்சரிக்கை செய்ததுடன் காதலனை தாக்கியுமுள்ளார். இதையடுத்து காதலுக்கு பெற்றோர் இடையூறாகவே யிருப்பார்கள் என்று முடிவு செய்த இவர்கள் வஞ்சம் தீர்க்கும் எண்ணத்துடன் செயற்பட்டு வந்துள்ளனர். பாடசாலையிலும் ரியூசன் வகுப்பறையிலும் பழிதீர்க்கும் திட்டத்தை தீட்டியுள்ளனர். கடந்த சித்திரை மாதம் 7 ஆம் திகதி மாலை ரகு தனது மனைவி, மக்களுடன் புத்தாண்டு உடு துணிகள் வாங்குவதற்காக மட்டக்களப்பு நகருக்குச் சென்றனர். அந்தநேரம் தொடக்கம் இளைய மகள் தனது கையடக்கத் தொலைபேசி ஊடாக எஸ்.எம்.எஸ். மூலம் தனது காதலனுடன் தொடர்பில் இருந்துள்ளார்.

காதலனும் நண்பர்களும் அருகிலுள்ள வைத்தியசாலைக்குச் சென்று தங்களுக்கு தூக்கம் குறைவாக இருப்பதாகக் கூறி பெரும் எண்ணிக்கையிலான தூக்க மாத்திரைகளைப் பெற்று இடித்துத் தூளாக்கி கைவசம் வைத்திருந்தனர். ரகு தனது குடும்பத்தாருடன் புத்தாண்டுக்குத் தேவையான உடு துணிகள் வாங்குவதற்குச் சென்ற பின்னர் மகள் தலக்ஷனா காதலனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை அறிவித்திருக்கிறார். வீட்டின் திறப்பு சமையலறை ஜன்னல் ஓரத்தில் உள்ளது. நீங்கள் வீட்டிற்குச் சென்று குசினியில் மீன்கறிச் சட்டியில் தூக்கமாத்திரைத் தூளைக் கலந்து விடுமாறு கூறியிருக்கிறாள். காரியம் கச்சிதமாக முடிந்திருக்கிறது.

அன்றிரவு 7 மணிக்குப் பின்னர் வீட்டுக்கு ரகுவின் குடும்பத்தினர் திரும்பியிருக்கிறார்கள். வழமை போல் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்கள்.

ஆனால், தங்களின் இளைய மகள் காதலனுடன் சேர்ந்து தங்களுக்கு எதிராக செய்திருந்த சூழ்ச்சியினை அறிந்திருக்கவில்லை. சம்பவ தினம் இரவு ரகுவின் மூத்த மகள் வைஷ்ணவி வழக்கம் போல அம்மம்மாவின் வீட்டிற்கு நித்திரைக்குச் சென்றுள்ளார். தாய் விப்ரா மூத்த மகளுக்கு இரவுச் சாப்பாடு எடுத்துச் சென்றிருக்கிறார்.

(தொடரும்)

நன்றி:வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

22



அதிகாலை வெயில் சுள்ளென உடலில் பட்டது. புரவிகள் தட்டுவான் கொட்டியைக் கடந்து கடவை முகாமை நெருங்கின. முன்னால் வந்த புரவிகளில் சங்கிலியும் கனகராஜனும் அமர்ந்து பயணம் செய்தார்கள். அவர்களிடையே உரையாடல் இதுவரை நிகழவேயில்லை. சங்கிலி சிந்தனைவயப்பட்டிருந்தான். அவன் சிந்தனைக்குரிய காரணத்தை அறியாவிடினும் குழப்ப கனகராஜன் விரும்பவில்லை. விரைவாக தலைநகரை அடையும் ஆவல் மன்னனிடம் காணப்பட்டதை அவன் புரிந்து கொண்டான். அதனால் ஓரிடமும் தரிக்காது புரவிகளை வேகமாக நடக்க விட்டனர்.

என்ன மௌனம் கனகராஜா?

நீங்கள் யோசனையோடு வந்தீர்கள். குழப்ப நான் விரும்பவில்லை.

முதலமைச்சர் தன் எண்ணப்படி நடக்கலாமா?

அதிகாரம் அவரிடமிருந்தால் எப்படியும் நடக்கலாம். இப்போது என்ன நடந்தது அரசே?

எதுவுமில்லை.

பளையைப் புரவிகள் கடந்தன. கனகராஜன் உரிமையுடன் கேட்டான்:

மன்னா, கோபிக்காமல் என் கேள்விக்குப் பதில் கூறுங்கள். எமது அரச வழக்கப்படி மூத்த மைந்தனே அரசனாக வேண்டும். சிங்கபாகு, வீரபண்டாரம் இருவரும் பட்டத்து இளவரசர்கள்; இளவயதில் கொலையுண்டார்கள். அடுத்து பரநிருபசிங்கர் முடி தரித்திருக்க வேண்டும். அவர் மறுத்தால் அவரின் மகன் பரராசசிங்கன் மகுடம் தரித்திருக்க வேண்டும்.



சங்கிலியன் அரண்மனை

அவரும் மறுத்திருந்தால் என் அண்ணன் பெரியபிள்ளை சிம்மாசனத்தில் அமர்ந்திருக்க வேண்டும். அவ்வாறிருக்க மூன்று பேரைத் தாண்டி எனக்கு முடி கிடைத்த மர்மம் என்ன? எல்லாம் தெரிந்த நீயுமா அதனைக் கேக்கிறாய்? என்ற சங்கிலியை ஏறிட்ட கனகராஜன் அவசரமாகக் குறிக்கிட்டான்.

## காசி நயினார்

மன்னிக்க வேண்டும். புதியதொரு பிரச்சினை அரச உரிமை குறித்து உருவாகியுள்ளது.

கோகர்ணவன்னியன் தனது எட்டு வயது மைந்தனுக்கு யாழ்ப்பாண அரசு உரிமையானது என்பதையா? வன்னிக்கு உரிமை கொண்டாடலாம். தவறில்லை. முடிக்கல்லவிசரன். அக்கையின் புருஷனாகிவிட்டான்.

அதில்லை.... இது வேறு...

சங்கிலி மன்னனின் முகத்தில் வியப்புக் குறிதோன்றியது. அவனறியாத புதிய தொரு சங்கதியைக் கனகராஜன் கூறுகிறான். ஆவலை அடக்க முடியவில்லை. கனகராஜனை ஏறிட்டான்.

அப்புதிய சங்கதியைக் கனகராஜன் சொன்னான். சங்கிலியால் நம்பவே முடியவில்லை.

விடைபெறும்போது பதவியா வன்னிமை உலோகநாத தண்டநாயக்கன் அகக்குண்டை தூக்கிப்போட்டான். தன்னுடன் மறைந்துவிடும் எனக்கருதிய இரகசியம் பதவியா வன்னிமை வரை பரகசியமாகி விட்டது.

மகாமந்திரி அவர்களே இதைக் கேட்பதற்கு மன்னியுங்கள். கண்டிமன்னன் விக்கிரமபாகுவின் மனைவியின் பிணி தீர்க்க நீங்கள் சென்றபோது உங்கள் மகன் பரராசசிங்கனைக் கூட்டிப் போகவில்லை. அது நிச்சயம். அவ்வாறிருக்க அசப்பில் பரராசசிங்கனை ஒத்த ஒருவனைக் கண்டி அரண்மனையில் காண்பது சாத்தியமா? நான் பரராசசிங்கனை ஒத்த ஒருவனைக் கண்டேன்.

சங்கிலிக்கு மணி மகுடத்தை விட்டுக்கொடுத்ததில் இருந்த பரநிருபசிங்கர் அமைதியை இழந்தவரானார். மகனும் மனைவியும் பேசாது விட்டமை மாத்திரமல்ல. கண்டியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து தனது நிம்மதியை இழந்தவரானார்.

கண்டி அரசன் விக்கிரமபாகு அவரை இன்முகம் காட்டி இருகரம் நீட்டி வரவேற்றான். மனைவிக்கு வந்த வியாதியை மாற்றக் கூடிய வைத்தியன் அவன் தான் என் நம்பினான். மனைவியின் அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்றபோது அவளருகில் ராணியின் சேடிப் பெண்ணாக நந்தாதேவியை அவன் எதிர்பார்க்கவில்லை. இருபத்தைந்து வருடங்கள் கழிந்துவிட்டது. அப்போது கட்டிளங் குமரியாக காந்தப்பார்வையோடு அவள் யாழ்ப்பாண ராணியின் சேடிப்பெண்ணாக இருந்தாள். தாயைக் காண அங்கு வரும் பரநிருபசிங்கர் நந்தாதேவியைக் கண்ட பின்னர் அடிக்கடி வரத் தொடங்கினார். (தொடரும்)

---

# தகர்ந்துபோன தீர்மானங்கள்!

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டைப் புறக்கணிக்கப்போவதாகக் கனடிய ஆளும் கட்சியான பழமைவாதக் கட்சி அறிவித்துள்ளது. லிபரல் கட்சியும் இந்த விடயம் குறித்துப் பாராளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் பேசி வருகின்றது. இந்நிலையில் இந்த விடயம் குறித்துப் பாராளுமன்ற கேள்வி நேரத்தில் பலமுறை பேசிய என்.டி.பி கட்சி தங்களது மாநாட்டில் இது தொடர்பில் முக்கியத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பு தமிழர்களிடம் இருந்தது. ஆனால், மொன்றியல் மாநாட்டிற்குச் சென்ற தமிழ் என்.டி.பி உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் வேறு வகையானதாக அமைந்தது. வெட்கப்பட்டும் அவமானப்பட்டும் தலைகுனிந்தும் மாநாட்டு மண்டபத்தை விட்டு அவர்கள் வெளியேறிதாகச் சிலரது வாக்குமூலங்கள் இருந்தன.

இந்த மாநாட்டில் சீக்கியர்கள் பிரச்சினை தொடர்பான தீர்மானத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. பிராம்ரன் தொகுதி சீக்கிய மாகாண பாராளுமன்ற உறுப்பினரான ஜக்மீற் சிங் இந்திய அரசின் சீக்கியர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை உலக அரங்கில் அம்பலப்படுத்தி அதனால் படுகொலையுண்ட யாஸ்வாந்த் சிங் காரலா என்ற மனித உரிமையாளரைக் கௌரவித்து மண்டபம் நிறைந்த ஏகமனதான ஆதரவுடன் கூடிய தீர்மானம் ஒன்றைக் கொண்ர்ந்து நிறைவேற்றியிருந்தார். அதேவேளை, ஒரு இனத்தையே முற்றிலுமாக அழித்த இனப்படுகொலை குறித்து ஸ்காபுறோ- ரூஜ்ரீவர் என்.டி.பி பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.

என்ன காரணம்...?

ஒரு மனித உரிமையாளரை அங்கீகரிக்கவும் கௌரவிக்கவும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றிய என்.டி.பி கட்சியினது மாநாட்டு அரங்கில் ஒட்டுமொத்த ஈழத் தமிழர்களின் இனப்படுகொலையைக் கண்டிக்கும் தீர்மானத்தை ஏன் நிறைவேற்றவில்லை? என்பதும் ஆகக் குறைந்தது சீக்கிய இனத்துக்கு நிகழ்ந்த மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபடுத்தி யாவது எம் மக்கள் மீதான இனப்படுகொலை எள்ளளவேனும் பேசப்படாமல்கூட விடப்பட்டதற்கான காரணம் என்ன? என்பது ஒட்டுமொத்தத் தமிழர்களின் ஆதங்கமாக உள்ளது.



இது ஒருபுறமிருக்க மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபை ஈசன் அங்கு என்ன செய்துகொண்டிருந்தார் என்பதும் தற்போது எழுப்பப்படும் முக்கிய கேள்விகளில் ஒன்றாக இருக்கிறது.

இத்தீர்மானத்தை முன்னுரிமைப்படுத்துவதில் தவறிழைத்து மெத்தனப்போக்குடன் செயற்பட்டதுடன் அக்கறை காட்டாமல் இருந்து விட்டார் என தமிழ் மக்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபை ஈசன் மீது பாரிய விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரை தமிழ் சமூகம் தெரிவாக்கியதிலிருந்து தொடர்ந்துவரும் தேர்தல்களைச் சந்திக்கத் தயாராகி வரும் கனடியத் தமிழர்கள், தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்துவோம் என்பது வெறுமனே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் நடக்கும் கூத்தா என்கின்ற கேள்விகள் எழுந்துள்ளது மட்டுமல்லாமல், மக்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுப் பதவிக்கு வந்தவர்கள் இப்படியான விடயங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களா, இல்லையா என்பது இன்று கனடிய தமிழ் மக்கள் முன் எழுந்துள்ள விவாதமாகின்றது.

-இணையம்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2013-14.05.2013

## பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும்!



### தனுசு

மூலம், பூராடம்,
உத்தராடம் 1 ஆம் பாதங்கள்

**சவால்களை சமாளிக்க வேண்டிய நேரம்!**

**சாமர்த்தியமாகப்பேசி தக்க விதத்தில் காரியங்களை சாதித்துக் கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!**

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இராசிநாதன் புதன் 6 இல் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியை சனியும் ராகுவும் பார்க்கிறார்கள். சனி வக்ர இயக்கத்தில் இருந்தாலும்கூட அதன் பார்வை பதிவதால் எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. செலவு நடைகள் திடீர் திடீரென கூடலாம். குடும்பத்தில் குழப்பங்களும் கொள்கைப் பிடிப்போடு செயற்படும் சூழ்நிலையும்கூட ஒருசிலருக்கு உருவாகலாம்.

ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய நேரமிது. ஆயுள்காரகன் சனி வக்ரம் பெற்று இராசியைப் பார்க்கும்பொழுது அடிக்கடி ஆரோக்கிய பாதிப்புகள் வந்துகொண்டே இருக்கலாம். அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. தனாதிபதி வக்ர இயக்கத்தில் இருப்பதால் பணப் புழக்கத்தில் சற்று தடைகளும் வந்திருக்கலாம். வரவேண்டிய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படலாம். நீங்கள் கொடுக்க வேண்டிய கடன்களும் கொடுக்க முடியாமல் இருக்கலாம்.

குரு, சனி இரண்டும் உங்களுக்கு நன்மைகளை வழங்க வேண்டுமானால் அதைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவதோடு வியாழக் கிழமை தோறும் குரு கவசம் பாடி குரு வழிபாட்டையும் சனிக்கிழமை தோறும் சனிக்கவசம் பாடி சனீஸ்வரர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

பொதுவாக 9 க்கு அதிபதி சூரியன் 5 இல் உச்சம் பெறும்பொழுது பிள்ளைகள் வழியில் பெருமைக் குரிய சம்பவங்கள் நடைபெறலாம். அவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. திடீரென வரும் சில மாற்றங்கள் திகைக்கவும் வைக்கலாம். தித்திக்கவும் வைக்கலாம். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு உங்களுக்கு முழுமையான நற்பலன்கள் கிடைக்கப் போகிறது. ஓராண்டிற்கு குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. அதுவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**புதனின் மேட இடப சஞ்சாரங்கள்!**

புதன் ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். நீச்சம் பெற்ற புதன் மேடத்தில் வலிமையடைந்து சூரியனுடன் இணைவதால் புத ஆதித்ய யோகம் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல சுக்ரனுடனும் சேர்ந்து புத சுக்ர யோகம் உருவாகிறது. எனவே, எதிர்பாராத தனலாபம் இல்லம் தேடி வரலாம். வெளிவட்டார பழக்க வழக்கம் விரிவடையும். வீடு மாற்றம், உத்தியோக மாற்றத்திற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.

புதன் மே 7 ஆம் திகதி இடப இராசியில் சஞ்சரிப்பதால் எதிரிகளின் பலம் குறையும். இயல்பான வாழ்க்கையில் இருந்த குறுக்கீடுகள் அகலும். மாமன் வழி ஒத்துழைப்பு, தொழிலுக்கு கிடைக்கும் சேமிப்பு குறைந்ததே என்று கவலைப்பட்டவர்கள் அதை ஈடுகட்ட வாய்ப்புகள் கைகூடி வரும். வாழ்க்கைத் துணை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். கடல் தாண்டி செல்லும் வாய்ப்புகளை கைவிடுவதா? அல்லது ஏற்றுக் கொள்வதா? என்ற குழப்பம் மனதில் உருவாகும். சுயஜாதகத்தைப் பார்த்து முடிவெடுத்துக்கொள்வது நல்லது.


**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

இடப ராசியில் சுக்ரன் மே 5 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் கொஞ்சம் கவனமுடன் செயற்பட வேண்டிய காலமாகும். எதிரிகளின் பலம் மேலோங்கி இருக்கும். எந்த காரியமும் செய்வதில் குறுக்கீடு சக்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உடனிருப்பவர்களால் மனக்கவலை உருவாகும். அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி சேர்க்கும் எண்ணம் மேலோங்கும்.

இம்மாதம் அம்பிக்கை வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் இன்பங்கள் இல்லம் வந்து சேரும்.

# சிவல்புரி சிங்காரம்

## வக்ர சனிக்கு வழிபாடு தேவை!



### மகரம்

உத்தராடம் 2,3,4 ஆம்
பாதங்கள், திருவோணம்,
அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

**வக்ர சனிக்கு வழிபாடு தேவை!**

**முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை எந்நாளும் வளர்த்துக் கொண்டிருக்கும் மகர இராசி நேயர்களே!**

சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது உங்கள் இராசியை குரு பார்க்கிறார். ஆறுக்கு அதிபதி நீச்சம் பெற்றிருக்கிறார். ஆயினும் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் அல்லவா இருக்கிறார். எனவே, எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வதே நல்லது. நீங்கள் நன்மை தரும் என்று நினைத்து செய்த காரியம் வேறு விதமாக முடியலாம்.

பொதுவாக ராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும் பொழுது தான் உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வைத்திய செலவுகளும் விரயங்களும் தவிர்க்க முடியாததாக அமையும். ஒருசில காரியங்களை ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலைகூட உருவாகலாம். என்ன இருந்தாலும், கொஞ்சம் யோசித்தும் அருகில் இருப்பவர்களை ஆலோசித்தும் செய்யும் முயற்சிகளிலேயே வெற்றி கிடைக்கும்.

மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. சுகஸ்தானத்தில் அஷ்டமாதிபதி போய் அமர்ந்திருப்பதால் சுபவிரயங்களை செய்வதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபட இயலும். சுக்ரன் பலமிழந்து இருப்பதால் பெண்வழிப் பிரச்சினைகள் உருவாகி மறையும். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. குடியிருக்கும் வீட்டால் ஒருசிலருக்கு பிரச்சினைகள் உருவாகும். உடனடியாக எந்தவித முடிவும் எடுத்துவிட வேண்டாம். செவ்வாயும் பலமிழந்திருப்பதால் வாங்கும் சொத்துக்களில் பிரச்சினைகள் உருவாகும்.

பத்திரப்பதிவுகளில் கூடுதல் கவனம் தேவை. சனிக்கிழமைதோறும் காகத்திற்கு எள் கலந்த சாதத்தை வைப்பது நல்லது. சனிக்குரிய கவசம் பாடினால் கவலைகள் எல்லாம் தீரும். உள்ளூர் ஆலயத்தில் [illegible] தீபத்தை [illegible] தீபமாக ஏற்றுங்கள். [illegible] தகவல்கள் எல்லாம் நல்ல தகவல்களாக மாறும்.

**புதனின் மேட, இடப சஞ்சாரங்கள்!**

புதன் ஏப்ரல் 21 ஆம் திகதி மேட இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தந்தைவழி உறவில் இருந்த கிலேசங்கள் மறையும். தக்க தருணத்தில் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிந்தை மயங்கிய நிலையில் இருப்பவர்கள் சிறுசிறு பிரச்சினைகளைக்கூட எதிர்கொள்ள பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுக்கொள்வது நல்லது. திடீர் இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் ஏற்படலாம். செயற்பாடுகளில் தாமதம் ஏற்படும்.

புதன் மே 7 ஆம் திகதி இடபத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி பூர்வீக சொத்துக்களை விற்கும் சூழ்நிலைகூட ஒருசிலருக்கு உருவாகலாம். உத்தியோகத்தில் ஒரு பிடிப்பு ஏற்படாது. உள்ளத்தில் கவலையும் ஊர்மாற்றச் சிந்தனைகளும் மேலோங்கும். வரவைக் காட்டிலும் செலவு கூடும் நேரமிது.

**இடப சுக்ரனின் சஞ்சாரம்!**

மே 5 ஆம் திகதி இடப இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி வியாழனுடன் சுக்ரன் சேர்வதால் விரயங்கள் அதிகரிக்கும். வீட்டு தேவைகள் பூர்த்தியாவதில் தாமதம் ஏற்படும். பயணங்களால் பலன் கிடைப்பது அரிது. பக்கத்தில் இருப்பவர்களால் சிக்கல்கள் உருவாகும். சுகஸ்தான கேதுவின் ஆதிக்கம் மாறும்வரை எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். மறைமுக எதிர்ப்புகளும் உறவினர் பகையும் உருவாகும் நேரமிது.

இம்மாதம் சனிபகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். அதோடு வாலில் மணிகட்டிய ஆஞ்சநேயரையும் வழிபட்டு வளர்ச்சிப் பாதையில் உள்ள தளர்ச்சியை போக்கிக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 கி.மீ.நடந்து சென்று பயிலும் நான்காம் வகுப்பு மாணவன்

பாடசாலை கல்வி கற்பதற்காக நாளொன்றுக்கு 24 கிலோமீற்றர் நடக்கும் நான்காம் ஆண்டு மாணவன் ஒருவன் இரத்தினபுரி பலாங்கொடை நெக்குரென் தோட்டத்தில் வசித்து வருகின்றார்.

குறித்த மாணவர் விவேகானந்தா வித்தியாசாலையிலேயே கல்வி பயின்று வருகின்றார். இந்த பாடசாலை மற்றுமொரு தோட்டத்திலேயே அமைந்துள்ளது.

சப்ரகமுவ மாகாண சபை உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் முதலமைச்சர் மஹிபால ஹேரத்துடன் இப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். அப்போது நான்காம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் பாடசாலை செல்வதற்கு அதிகாலை 4 மணிக்கே வீட்டிலிருந்து புறப்பட்டுவிடுவார் என்றும் பாடசாலை முடிந்து வீட்டுக்கு திரும்புவதற்கு இரவு 7 மணியாகி விடும் என்றும் இந்த குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

குடும்பத்தில் மூத்த பிள்ளையான இவர் தனது பெற்றோருடன் நெக்குரென் தோட்டத்தில் வசித்து வருகின்றார்.

இந்த தோட்டத்தில் வாழ்கின்ற 16 பிள்ளைகளில் இவர் மட்டுமே பாடசாலைக்கு செல்கின்றார். இந்நிலையில் ஏனைய 15 மாணவர்களுக்கும் கல்வியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மாணவனை சந்தித்த முதலமைச்சர் இவ்வளவு கஷ்டத்திற்கு மத்தியிலும் கல்வியைத் தொடர்வதனையிட்டு அவருக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார். (அ-2)

## விவசாய நிலங்களில் அமைக்கப்படும் கட்டடங்கள் இடிக்கப்படும்

### ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

விவசாய நிலங்களில் கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதியில்லை. அவ்வாறு அமைக்கப்பட்டால் அவை எத்தனை வருடங்கள் கடந்தாலும் இடிக்கப்படும் என கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புகுழுக்கூட்டம் கடந்த 18 ஆம் திகதி நல்லூர் பிரதேச செய லக கேட்போர் கூட்டத்தில் நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கமநல சேவைகள் திணைக்கள அதிகாரியொருவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வயற் காணிகளில் தனியார் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்தோடு 1958 இலக்க சட்டத்தின் பிரகாரம் அனுமதியின்றி விவசாயநிலங்களில் கட்டப்படும் கட்டடங்கள் காலம் கடந்தாலும் அகற்றப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சட்டத்தரணிகளை சந்திக்க அகதிகளுக்கு அனுமதி மறுப்பு

### ஆஸி. அரசு தெரிவிப்பு

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள் மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் அல்லர் என அவுஸ்திரேலிய குடிவரவு மற்றும் பிரஜாவுரிமை அமைச்சர் பிரண்டன் ஓ கோர்னர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் அண்மையில் 39 பேரை நாடு கடத்தியிருந்தது.

அவர்கள் மெய்யான புகலிடக் கோரிக்கையாளர்கள் என்பதற்கு எவ்வித ஆதாரங்களும் அவர்களிடம் இல்லை என்றும் அத்துடன் அவர்களுக்கு சட்டத்தரணி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் சில புகலிடக் கோரிக்கையாளர்கள் சட்டத்தரணி உதவியைக் கோரவில்லை என அவர் தெரிவித்துள்ளார். நாடு கடத்தப்பட்டவர்களில் சிறுவர்களும் பெண்களும் அடங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய அரசாங்கம் சட்டத்திற்கு புறம்பான வகையில் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தியுள்ளதாகவும் அவர்கள் கேட்காவிட்டாலும் சட்டத்தரணி வசதிகளை வழங்கியிருக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

## 2012 ஆம் ஆண்டில் மட்டும் 15000 பேருக்கு புற்றுநோய் பாதிப்பு

கடந்த வருடத்தில் மட்டும் 15 ஆயிரம் புற்று நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த புற்று நோயளர்களுக்காக 150 கோடி ரூபா செலவில் மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவ் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. புற்று நோயாளர்களுக்கான மருந்துப் பொருட்கள் கொள்வனவு தொடர்பில் வாரம் ஒன்றுக்கு 50 தொடக்கம் 60 அறிக்கைகள் அனுப்பப் படுகின்றன.

இவற்றினை சுகாதார அமைச்சர் ஆராய்ந்து ஆலோசனை வழங்குவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது .

இந்த வருடத்திற்குள் புற்று நோயாளர்களுக்கு அவசியமான மருந்துப் பொருட்களுக்கான நிதியை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)




★1500-பிரேசிலைக் கண்ட முதல் ஐரோப்பியர் போர்த்துக்கீசரான பேதுரோ கப்ரால்.

★1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெஞ்சமின் கிரியெர்சன் தலைமையில் நடு மிசிசிப்பியைத் தாக்கினர்.

★1889-நடுப் பகலில் பல்லாயிரக்கணக்கானோர் காணிகளைக் கைப்பற்றுவதற்காக ஓடினார்கள். சில மணி நேரங்களில் ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா நகரம் மற்றும் கத்ரி (Guthrie) ஆகியவற்றில் 10 ஆயிரம் பேர் அங்கிருந்த வெற்றுக் காணிகளைக் கைப்பற்றிக் குடியேறினர்.

★1898-அமெரிக்க கடற்படையினர் கியூபாவின் துறைமுகங்களை முற்றுகையிட்டு ஸ்பானிய சரக்குக் கப்பல் ஒன்றைக் கைப்பற்றினர்.

★1912-ரஷ்யாவின் பொதுவுடைமைக் கட்சியின் பத்திரிகை ப்ராவ்டா சென் பீட்டர்ஸ்பேர்க்கிலிருந்து வெளிவர ஆரம்பித்தது.

★1915-முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஈப்ர (Ypres) ஜேர்மனி முதன் முதலாக குளோரீன் வாயுவை வேதியியல் ஆயுதமாகப் பாவித்தது.

★1944-இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் நியூகினியின் ஒல்லாந் தியா என்ற இடத்தில் தரையிறங்கினர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: குரோவேசியாவில் ஜசெனோவாச் வதை முகாம் கைதிகள் சிறையுடைப்பில் ஈடுபட்ட போது 520 கைதிகள் கொல்லப்பட்டனர். 80 பேர் தப்பியோடினர்.

★1945-இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் பெர்லினில் எபெர்ஸ்வால்ட் நகரை இலகுவாகக் கைப்பற்றியதைக் கேள்வியுற்ற ஹிட்லர் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார்.

★1970-முதலாவது பூமி நாள் கொண்டாடப்பட்டது.

★1983-ஹிட்லரின் நாட்குறிப்புகள் கிழக்கு ஜேர்மனியில் கண்டு பிடிக்கப்பட்டதாக டேர் ஸ்டேர்ன் என்ற ஜேர்மனிய இதழ் அறிவித்தது.

★2006-இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் உள்ள ஆய்வு மையத்தில் பிரமோஸ் ஏவுகணை வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★1724-இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த தத்துவவியலாளர் (இ.1804)

★1870-விளாடிமிர் லெனின், ரஷ்யப் புரட்சியாளர், லெனினிசம் என்ற கோட்பாட்டினை நிறுவினார். (இ.1924)

★1876-றொபேர்ட் ப்ாரானி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1936)

★1909-ரீட்டா லெவி- மொண்டால்சினி, நோபல் பரிசு பெற்ற இத்தாலியர்

★1919-டொனால்ட் கிராம், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.2001)

★1940-க.சட்டநாதன், ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதையாளர்

### இறப்பு

★1994-ரிச்சார்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்காவின் 37 ஆவது ஜனாதிபதி (பி.1913)

### விளாடிமிர் லெனின்



விளாடிமிர் லெனின் ஒரு ரஷ்யப் புரட்சியாளரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபரும் மற்றும் பின்னாளில் மார்க்சியம் என்ற கோட்பாட்டின் நிறுவுநரும் ஆவார்.

இவர் 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி பிறந்தார். லெனின் என்பது ரஷ்யப் புரட்சிக்காக வைத்துக்கொண்ட புனைபெயர். பின்னாளில் தன்னுடைய உண்மையான விளாடிமிர் உலியனொவ் என்கிற பெயரை விளாடிமிர் லெனின் என்று மாற்றிக்கொண்டார். ஏழைகளின் உழைப்பைச் சுரண்டி பணக்காரர்கள் கொள்ளை இலாபம் சம்பாதிப்பார்கள் . உழைக்கும் மக்கள் மேலும் வறுமையில் வாடிக் கிடப் பார்கள். ரஷ்யாவிலும் ஒரு காலத்தில் மக்கள் அப்படித் தான் துன்பத்தில் உழன்றனர்

இந்த அநியாயத்தை ஒழித்துக் கட்டியவர்தான் லெனின் .அவருடைய தலைமையில் 1917 ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி உலக வரலாற்றில் என்றுமே நிலைத்து நிற்கும் நாள்முதல் முதலாக சுரண்டல் ஒழிக்கப்பட்டது அந்த நாளில்தான். கஞ்சிக்கு வழியில்லாமல் வயிறு காய்ந்து கிடந்த உழைப்பாளிகள் தன்மானத்துடன் நிமிர்ந்து நின்றது அந்த நாளில்தான் . அன்று தான் உலகில் முதல் பாட்டாளி வர்க்க அரசு அமைக்கப்பட்டது. இதனால்தான் அவருடைய மரணத்துக்கு உலகமே அழுதது .உலகின் ஆறில் ஒரு பகுதி நிலப்பரப்பில் வறுமையை ஒழித்தவர் என்ற நன்றியும் மீதி நிலப்பரப்பில் அதை நிறைவேற்றும் முன்னரே இறந்து விட்டார் என்ற துக்கமும் தான் உலகத்தொழிலாளர்களைக் கண்ணீர் சிந்த வைத்தது: இவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 21 ஆம் திகதி தனது 53 வயதில் உயிரிழந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை நின்ற பின்பும் நிற்காத தூறல்கள்

**அனைத்துலக சஞ்சிகையான ரைம் இதழில் ஹ்ரிஸ்ரா மார் எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை வடக்கிலிருந்து வெளியிடப்படும் தமிழ் ஊடகங்கள் மீதும் பணிபுரியும் பணியாளர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் ஆகின்ற நிலையிலும் இங்கு சமாதானம் முழுமையாக எட்டப்படவில்லை என்பதற்கான பிறிதொரு சாட்சியமான தமிழ் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காணப்படுகிறது.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கான சுதந்திரமான தனித் தாய்நாடு கோரி பலபத்தாண்டுகளாகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகள் 2009 இல் தோற்கடிக்கப்பட்டபோது, மேற்கொள்ளப்பட்ட யுத்தகால மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும் என அனைத்துலக சமூகம் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை.

கடந்த மார்ச்சில் இந்தியா உட்பட்ட 25 நாடுகள், அமெரிக்கா தலைமையில் இலங்கை தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டுமெனக்கோரி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருந்தன. இத்தீர்மானமானது, இலங்கையில் தற்போதும் இடம்பெறும் படுகொலைகள், காணாமற்போதல்கள், சித்திரவதைகள் உள்ளடங்கலாக பல்வேறு மனித உரிமை மீறல்கள் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தனது நாட்டில் சமாதானம் மற்றும் அமைதியான சூழலை உருவாக்குவதற்காக மேற்கொண்டுவரும் ஜனநாயக மீள்கட்டுமான முயற்சிகளை அமெரிக்க அரசாங்கம் குழி தோண்டிப் புதைக்க முயல்வதாக இலங்கையின் ஊடக மற்றும் தகவற்றுறை அமைச்சரும் அரசாங்கப் பேச்சாளருமான கெஹலிய றம்புக்வெல இலங்கை அரசால் நடாத்தப்படும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் தெரிவித்திருந்தார்.

இது பேரின் முடிவாக இருக்கின்றதே அன்றி, மோதலின் முடிவாக இருக்கவில்லை. இலங்கையின் சட்ட ஆட்சி மீறப்பட்டதுடன் தண்டனைக் கலாசாரம் அதிகரித்துள்ளது என கொழும்பைத் தளமாகக்கொண்டியங்கும் கொள்கை மாற்றீடுகளுக்கான மையத்தின் நிறைவேற்று இயக்குனர் தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரத்தை மதிப்பதில் 179 நாடுகளில் இலங்கை 162 ஆவது நாடாக உள்ளதாக எல்லைகளற்ற ஊடக அமைப்பின் 2013இற்கான உலக சுதந்திர சுட்டியில் மதிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புபட்ட ஊடகங்கள் மிக நீண்டகாலமாக இலக்கு வைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கூட இலக்கு வைக்கப்பட்டுள்ளனர்.

2009 இல் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னர் சண்டே லீடர் ஊடகத்தின் ஆசிரியரான லசந்த விக்கிரமதுங்க இரண்டு துப்பாக்கிதாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை விமர்சித்து கருத்துக்களை வெளியிட்ட இவர் தனது பணியகத்திலிருந்து வீட்டிற்கு வரும் வழியில் இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.

இவர் தனக்கு இவ்வாறானதொரு ஆபத்து வரும் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார். "நான் இறுதியாகப் படுகொலை செய்யப்பட்டால் அது இலங்கை அரசாங்கத்தாலேயே நான் படுகொலை செய்யப்பட்டிருப்பேன்" என லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு சில நாட்களின் முன்னர் இவர் இவ்வாறு தனது ஆசிரியர் பத்தி ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி சேவையில் செய்தி வாசிப்பளாராகக் கடமையாற்றிய தமிழ்ப்பெண் ஒருவரை மீண்டும் இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என அண்மையில் ஐக்கிய அரபுக் குடியரசிடம் மனிதஉரிமை அமைப்புக்கள் கோரியிருந்தன. இவ்வாறு இவர் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அங்கே சித்திரவதைக்கு உள்ளாக்கப் படலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே மனித உரிமை அமைப்புக்கள் இதனை சுட்டிக்காட்டியுள்ளன.

26 ஆண்டுகளாக இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டுப் போரின் போது விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை இராணுவமும் காவற்றுறையினரும் தமிழ் மக்களுக்கு எதிராக சித்திரவதைகளை மேற்கொண்டதுடன் பாலியல் பலாத்காரங்களையும் புரிந்துள்ளனர் என்பதற்கான சாட்சியங்கள் உள்ளன. இதேபோன்று தற்போது இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் தமிழ் மக்களும் இவ்வாறான சித்திரவதைகளுக்கு உட்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2006 இற்கிடையில் பல்வேறு பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் இலங்கை பாதுகாப்பு படையினரால் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சிறையிலடைக்கப்பட்டுள்ள ஆண் மற்றும் பெண் கைதிகள் மீது சித்திரவதைகளும் பாலியல் வன்புணர்வுகளும் இடம்பெறுவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இவ்வாறான மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் வெளிப்படுத்த முடியாதநிலை காணப்படுகிறது. சிறையில் தடுத்துவைக்கப்பட்டவர்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 75 சம்பவங்களை கண்காணிப்பகம் பதிவு செய்துள்ளது.

இவ்வாறான அச்சநிலை காரணமாக அதிக எண்ணிக்கையானோர் இலங்கையை விட்டு வெளியேறி வருகின்றனர். இவர்கள் படகுகளில் பயணிப்பதால் தாம் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தபோதிலும் புகலிடக் கோரிக்கை கோரி இவ்வாறான ஆபத்தான பயணங்களை மேற்கொண்டு வெளி நாடுகளில் தப்பிச்செல்கின்றனர். இலங்கை அரசாங்க அதிகாரிகள் போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதியில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்கின்ற போதிலும்கூட பெருமளவான மக்கள் புலம்பெயர்ந்து செல்கின்றனர்.

போருக்குப் பின்னான இக்கால கட்டத்திலும் கணிசமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். இலங்கை அரசாங்கம் பொருளாதார அபிவிருத்திகளை முதன்மைப்படுத்தி மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவது போன்று காண்பித்தாலும் கூட மக்கள் வேறு நாடுகளுக்குத் தப்பிச் செல்கின்ற நிலை காணப்படுகிறது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கில் வாழும் மக்கள் படகுகள் மூலம் ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்ல விரும்பவில்லையாயினும்கூட அவர்கள் இவ்வாறு செல்ல வேண்டிய நிலை காணப்படுவதுடன் இதற்காக இவர்கள் பெருமள வான பணத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இலங்கை பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை விட வடக்கில் வாழும் மக்களின் எண்ணிக் கைக்கும் இராணுவத்தினரின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதம் அதிகரித்துக் காணப்படுகிறது. இலங்கை இராணுவத்தினர் தற்போது வடக்கில் இராணுவம் சாராத செயற்பாடுகளில் அதாவது விவசாயம் செய்தல், சிறிய வர்த்தக நிலையங்களை உள்ளூர் தமிழ் வர்த்தகர்களுக்கு எதிராக மேற்கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது.



ஹ்ரிஸ்ரா மார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

435



## துஷ்ட சகவாசம்

ஒரு ஊரில் ஒரு சந்நியாசி இருந்தார். அவர் ஊரின் ஒரு மூலையில் ஒரு குடிசையில் இருந்து வந்தார். அவருக்கு அவ்வூர் ஜனங்களில் சிலர் தினமும் பழமும் பாலும் கொடுத்து மரியாதை செய்து பக்தியுடன் வழிபட்டு வந்தனர். அவரும் அவைகளை ஏற்றுக்கொள்வார்.

யாருமே ஒருநாள் ஒன்றும் கொடுக்காவிட்டால் பட்டினி கிடப்பாரே தவிர அன்ன ஆகாரம் இல்லையே என்று கவலைப்படமாட்டார். அவர் இவ்விதம் அடிக்கடி உபவாசம் இருப்பதைக் கண்ட ஒரு பக்தன் அவருக்கு ஒரு பசு மாட்டை தானமாகக் கொடுத்தான். அவரும் அதை வளர்த்து காப்பாற்றி வரலானார்.

### அம்புலிமாமா கதைகள்


ஒரு திருடன் ஒருநாள் இரவு அப்பசுவை எப்படியாவது திருடிக்கொண்டு போய்விடுவதென்று திட்டமிட்டான். அக்குடிசையின் கதவுக்குத் தாழ்ப்பாள் கிடையாது. எனவே சத்தப்படுத்தாமல் கதவைத் திறந்து பசுவை செலுத்திக் கொண்டு போய்விடலாமெனப் புறப்பட்டான் அக்குடிசையை நோக்கி.

சிறிது தூரம் சென்றதும் தன் பின்னாலேயே ஒரு மனிதன் வந்து கொண்டிருப்பதை அத்திருடன் கவனித்தான். உடனே சட்டென்று நின்று யார் நீ? ஏன் என்பின்னால் வருகிறாய்? என்று கேட்டான். அதற்கு அந்த மனிதன் நான் ஒரு பேய். அவ்வூரின் ஒரு மூலையில் உள்ள சந்நியாசியைக் கொல்லப்போகிறேன். அந்தச் சந்நியாசி அங்கு வந்தது முதல் அவ்வூரில் உள்ளவர்கள் எல்லாம் நல்லவர்கள் ஆகிவிட்டார்கள். ஊரில் அநியாயம் அட்டூழியம் ஒன்றும் நடப்பதே இல்லை. இதனால் என் புகழ் மங்கி எனக்கு வேலை இல்லாமல் போய் விட்டது. அச்சந்நியாசைக் கொன்று விட்டால் என் பிரச்சினை தீர்ந்துவிடும். ஆமாம் நீ எங்கே போகிறாய்? என்று கேட்டான் திருடனைப்பார்த்து.

நான் ஒரு திருடன். நானும் அதே சந்நியாசியின் குடிசைக் குப் போகிறேன். அங்கே யுள்ள பசுவைத் திருடிக் கொண்டு போகப்போகிறேன் என்று அத்திருடன் கூறினான். இருவரும் சேர்ந்தாற்போலவே அக்குடிசையை நோக்கிச் சென்றனர். எங்கும் சத்தமேயில்லை. சந்நியாசியோ நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

இந்தப்பூதம் முதன்முதலில் சந்நியாசியைக் கொல்லுமானால் சந்நியாசி இறக்கும் போது ஓ[illegible] அக்குரல் கேட்டு ஊரார் கூடி விடுவார்கள். அப்போது பசுவைத்திருடிக்கொண்டு போவது முடியாத காரியம். ஆகவே முதலில் என் வேலையை முடித்துக் கொள்கிறேன் என்று நினைத்தான் திருடன்.


அவ்விதமே மனித உருவிலுள்ள பூதமும் திருடன் பசுவை அவிழ்க்கப்போனால் அது அம்மா என்று கத்த சந்நியாசி விழித்துக்கொண்டு விடுவார். பின்பு கூட்டம் கூடிவிடும். என்னுடைய வேலை நடக்காமல் போய் விடும் என நினைத்தது.



உடனே திருடனிடம் அப்பா நான் முதலில் சந்நியாசியைக் கொன்று விடுகிறேன். பின்பு பசுவை செலுத்திக்கொண்டு செல்லலாம். யாரும் உன்னை ஒன்றும் செய்யமுடியாது என்றது.

அதற்கு அந்தத் திருடனோ வேண்டாம், வேண்டாம் நான் முதலில் சத்தப்படுத்தாமல் பசுவை செலுத்திக்கொண்டு போய்விடுகிறேன். பின்பு நீ அந்தச் சந்நியாசியைக் கொல்லலாம் என்றான். பூதமோ முடியாது முதலில் என்னுடைய வேலைதான். எனவே திருடனும். பிடிவாதமாக இல்லை. இல்லை. நான்தான் முதலில் என்னுடைய வேலையை முடித்துக் கொள்வேன் என்றான். இருவரிடையே தர்க்கம் வலுத்தது. முதலில் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்ட அவ்விருவரும் உரத்த குரலில் பேசிக்கொள்ளலாயினர். பின்பு ஒருவரையொருவர் பலமாகத் திட்டிக் கொள்ளலாயினர். கோபத்தில் பொறுமையிழந்த திருடன் சந்நியாசியை எழுப்பி ஐயா, உம்மைக்கொல்ல இந்தப் பூதம் வந்திருக்கிறது என்று உரக்கக்கூறினான். பூதமோ கோபத்துடன் இவன் திருடன். உன் பசுவைத் திருடிக்கொண்டு போகவந்து இருக்கிறான் என்றது.

இந்தக்கூக்குரல் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ளவர்களெல்லாம் விழித்துக் கொண்டனர். அவர்கள் தடிகளையும் அரிவாள் கத்திகளையும் எடுத்துக் கொண்டு ஓடிவந்து அவர்களைச்சூழ்ந்து கொண்டனர். சிலர் திருடனைப் பிடித்துக்கொண்டனர். அந்தக் கிராமத்து மாந்திரீகனொருவன் மந்திரத்தால் பூதம் மடிந்தது. போக்கிரிகளிடையே ஏற்படும் சிநேகம் வெகுநேரம் நிலைத்து இருக்காது என்பதற்கு பூதமும் திருடனும் கொண்ட நட்பே உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோய்களுக்கான மருந்து இலங்கையில் உற்பத்தி செய்யப்படும்

## ஜனாதிபதி நம்பிக்கை

தொற்றாநோய்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் அடுத்து வரும் மூன்று நாட்களில் இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 660 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பத்து மாடிகளைக் கொண்ட மூன்றாவது விடுதித் தொகுதியை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் உரையாற்றுகையில், உங்கள் அனைவருக்கும் நான் முதலில் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு உங்கள் அனைவரதும் நல்லாரோக்கியத்திற்கும் பிரார்த்திக்கின்றேன்.

பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்படாதுள்ள சேனக பிபிலேயின் தேசிய மருந்துப் பொருள் கொள்கையை செயலுருப்படுத்துவதற்கு தீர்மானித்திருப்பதாகவும் கடந்த கால அரசாங்கங்கள் முடிவுகள் எடுப்பதற்குத் தயங்கிய விடயங்களில் கூட நாட்டு மக்களின் ஆரோக்கிய நலன்களைக் கருத்தில் கொண்டு தாம் தீர்மானங்கள் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த 30 வருடங்களாக நாம் எந்த இடத்திலாவது மரணிப்போம் என்ற நிலையில் தான் வாழ்ந்தோம். அப்போது இந்நாட்டு மக்களின் ஆயுட் காலத்தினை சுகாதாரத் துறை தீர்மானிக்கவில்லை.

இனிமேல் அப்படியான ஒரு நிலைமை இந்நாட்டில் மீண்டும் ஏற்படாது. அப்படியான நிலைமை ஏற்படவும் நாம் இடமளிக்கமாட்டோம்.

இந்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். இதன் நிமிர்த்தம் நாம் அழைப்புக்களை விடுத்து இதற்கான தனியான கைத்தொழில் பேட்டையொன்றைக் குருநாகலில் ஆரம்பித்துள்ளோம்.

இந்நாட்டு மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்த வேண்டும். அதனால் நாமெல்லோரும் ஒன்றுபட்டு அதற்குத் தேவையான வேலைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும். (அ-2)

# இந்திய கப்பல்களில் 250 பேருக்கு பயிற்சி

கடற்படை அதிகாரிகள் 250 பேர் தற்போது இந்திய கப்பல்களில் பயிற்சி பெற்று வருவதாக இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை கற்படையினருக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கண்ணுக்குப் புலப்படாத சக்தி வாய்ந்த உறவு இன்னமும் நீடிக்கின்றது. இந்த உறவு முற்காலத்தில் இருந்தே காணப்படுகின்றது என்றார் (அ-2)



மீள்குடியேற்றப்பட்ட பொன்னாலை, காட்டுப்புலம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்களை அறிந்து கொள்ளும் முகமாக அண்மையில் குறித்த பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மீள்குடியேற்றப்பட்ட மக்களுடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம்:-எஸ்.ஆர்.கரன்)

# தமிழ் மக்களின் பல காணிகள் சிங்களவர்களுக்கு சொந்தமா?

## சுரேஷ் எம்.பி. கேள்வி

மணலாறு பிரதேச கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களிலுள்ள தமிழ் விவசாயிகளின் உறுதியுள்ள காணிகளை சிங்களவர்களுக்கு உரிமையாக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டுகின்றது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளதாவது,

இந்தப் பிரதேசங்களில் வசித்த தமிழ் மக்கள் இராணுவத்தினால் விரட்டியடிக்கப்பட்டனர். பின்னர் இங்கு சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

இவர்கள் தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல்களை அடாவடித்தனமாக கைப்பற்றி விவசாயம் செய்து வருகின்றனர். அரசாங்கம் நேற்று முன்தினம் தமிழ் மக்களுக்கு உரிமையான உறுதியுள்ள காணிகளை சிங்கள மக்களுக்கு உரிமையாக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்கியுள்ளது.

அரசாங்கமே இதுபோன்ற சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை யாரிடம் முறையிட முடியும். இதுதொடர்பாக வழக்கு தொடர்ந்தால் அது இழுத்தடிக்கப்படுகின்றது. தமிழ் மக்கள் விரக்தியின் எல்லைக்குச் செல்லும் நிலைதான் உருவாகி வருகின்றது என்றும் அவர் கூறினார். (அ-2)

# போர் தவிர்ப்பு வலயம் என்னும் ஆவணப்படம் திரைக்கு வருகிறது

சனல் 4 தொலைக்காட்சி தயாரித்துள்ள போர் தவிர்ப்பு வலயம் என்ற 90 நிமிட ஆவணப்படத்தின் முன்னோட்டக் காட்சி மீண்டும் லண்டனில் திரையிடப்பட்டுள்ளமையானது இலங்கை அரசுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதி 138 நாட்களில் இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தை கெல்லும் மக்ரே தயாரித்துள்ளார்.

இந்த ஆவணப்படத்தின் ஒரு பகுதி கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிலும் புதுடில்லியிலும் வெளியிடப்பட்டு பெரும் புயலைக் கிளப்பியது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்துக்கு அதிகளவு நாடுகள் ஆதரவு அளிப்பதற்கு இந்த ஆவணப்படம் ஒரு காரணியாக அமைந்தது.

இந்நிலையில் இந்த ஆவணப்படத்தின் முன்னோட்டக் காட்சி நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் லண்டனில் உள்ள புரான்ட்லைன் கிளப்பில் திரையிடப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கேள்வி- பதில் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை லண்டனில் பொதுநலவாய அமச்சரவை நடவடிக்கைக் குழுவின் முக்கிய கூட்டம் நடைபெறவுள்ள நிலையிலேயே இந்த ஆவணப்படம் திரையிடப்பட்டுள்ளது.

இது பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் இருந்து இடமாற்றம் செய்வது குறித்து இலங்கை அரசுக்கு நெருக்கடியைக் கொடுப்பதாக அமையும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# வடமாகாணத்திற்கான ஆட்பதிவு காரியாலயம்

## இன்று வவுனியாவில் திறப்பு

வட மாகாணம் முழுவதற்குமான மாகாண ஆட்பதிவு காரியாலயமொன்று வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இக்காரியாலயம் இன்று திங்கட்கிழமை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்சேவை மூலம் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் வசிக்கும் பொது மக்களுக்கு தேவையான அடையாள அட்டைககளை இக்காரியாலயத்தின் மூலம் விரைவாக பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாகாண காரியாலயத்தைத் திறப்பதற்கான முழுமையான நிதி உதவி ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டம் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகிறது.

இவ் வேலைத்திட்டத்தின் கீழான இரண்டாவது மாகாணக் காரியாலயம் கிழக்கு மாகாணம் முழுவதையும் தழுவுமுகமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலக வளாகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

வட மாகாண காரியாலயத்தினூடாக வழங்கப்பட்ட சேவைகள் வருமாறு ,

வட மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களினாலும் பெற்றுக்கொள்ளப்படும் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் மாகாண காரியாலயத்தினால் பொறுப்பேற்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்டு தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.வடமாகாண பாடசாலை விண்ணப்பதாரிகளுடைய விண்ணப்பங்கள் மாகாண காரியாலயத்தில் பொறுப்பேற்கப்பட்டு அடையாள அட்டைகளை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

பொதுமக்களுக்கு அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான விண்ணப்பங்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் தகவல்கள் வழங்குவதுடன் இச் செயற்பாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வினை விரைவாக பெற்றுக்கொடுத்தல்.

இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் நிலையங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் நிர்வகித்தலும் ஆகும் என ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (அ-2-250)

# உண்மை நிலையை விளக்கி உலகமெங்கும் மின்னஞ்சல்

## அனுப்புகின்றது இராணுவம்

இராணுவம் பொதுமக்களைக் கொடுமைப்படுத்தவில்லை என்பதை முழு உலக நாடுகளுக்கும் தெரியப்படுத்துவதற்காக மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பும் பணிகள் இராணுவத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய நாளாந்தம் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டு வருவதாக கிளிநொச்சியின் ஐந்தாவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியான லெப்டினன் கேணல் அஜித்பி.விக்ரமசேகர கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையகமாக இருந்து வந்த கிளிநொச்சியில் இடம் பெயர்ந்த மக்களுக்கென இராணுவம் நாளாந்தம் செய்யும் பணிகள் பற்றிய ஆதாரபூர்வமான விபரங்கள் இதன் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன.

உலகெங்கிலும் இருக்கும் அரசியல்வாதிகள், அரசாங்கத் தலைவர்கள், கல்விமான்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், நீதிபதிகள் உட்பட முக்கிய தலைவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவதற்காக தினமும் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மின்னஞ்சல்களை அனுப்பிக் கொண்டிருப்பதாக அவர் மேலும் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நகரமயமாக்கல் திட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினது ஆரம்பம் அன்றிருந்த பரமேஸ்வராக் கல்லூரியினுடைய வளங்களைப் பெற்று விருத்தியடைந்ததாலும் உயர்திரு சேர்பொன் இராமநாதனின் அறக்கொடையினாலும் பெரியவர்களின் அர்ப்பணிப்பினாலும் திருநெல்வேலியில் தனக்கொரு இடந்தேடி அமையப்பெற்று இன்று வானுயர வளர்ந்திருப்பது பெருமைக்குரியதே. இருப்பினும் இப்பல்கலைக்கழகம் இன்னும் நூறு ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டத்தை உள்வாங்கி திட்டமிடப்பட்டு செயற்பட வேண்டும் என்ற கருத்து பலமட்டங்களிலும் பலவாறாக எழுந்துள்ள நிலையில் உயர்கல்வி அமைச்சினால் தற்போது பல்கலைக்கழக நகரமயமாக்கல் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கையில் மொரட்டுவ பல்கலைக்கழகம், றுகுணு பல்கலைக்கழகம், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் இணைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் யாழ்ப்பாண பிரதேசம், கிளிநொச்சியில் அமைய இருக்கின்ற வளாகம், வவுனியா வளாகம் ஆகியன உள்ளடக்கப்படுகின்றன.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமையவிருக்கின்ற விவசாய மற்றும் பொறியியல் பீடங்கள் அவற்றுக்கான உள்ளக மற்றும் வெளியக கட்டமைப்புக்கள் இவற்றுடன் இணைந்த பல்கலைக்கழகமாக ஒரு காலத்தில் பரிணமிக்கும் போது அதற்கு தேவையான நிலவசதி, இடவசதி இவற்றுடன் கட்டுமான வசதி என்பனவற்றை இன்றிலிருந்தாவது திட்டமிடவேண்டும் என்பதன் அவசியத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

இதற்கான திட்டத்தை வடிவமைத்து அதன் மூலம் பல்கலைக்கழகத்தை மேலும் திட்டமிட்ட அபிவிருத்தியினூடாக பயணிக்க வழிவகை செய்தல் வேண்டும். இதுவரை காலமும் பல்வேறு இடர்பாடுகளுக்குள் சிக்கி தவித்து தற்போது எழுந்து நிற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியை மேலும் விரிவுபடுத்தும் வருங்காலத்துக்கான தேவைகளை இனங்கண்டு, அதற்கான முன்னகர்வுகளைச் செய்வதும் அவசியமான நிலையில் இப்பல்கலைக்கழகத்தின் அபிவிருத்தியில் அக்கறைகொண்ட நலன் விரும்பிகளிடமிருந்து இது தொடர்பான கருத்துக்களைப்பெற விரும்புகிறோம். பல்கலைக்கழகத்தில் அக்கறையுள்ள அனைவரினதும் சிறந்த முன்மொழிவுகளை உள்ளடக்கியதான திட்த்தைத் தயாரிப்பதும் அதனை ஆவணமாக்கி ஆதாரமாக வைத்துக் கொண்டு மேலும் திட்டமிடுவதும் சாலப் பொருத்தமாக இருக்கும் எனவும் எண்ணுகின்றோம்.

பல்கலைக்கழக நகரமயமாக்கல் திட்டம் என்பது வலிந்து திணிக்கும் செயற்பாடல்ல. பல்கலைக்கழகம் சார்ந்த அனைவரதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்து பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான வளங்கள் அனைத்தையும் பல்கலைக்கழக சமூகத்தினரது பங்களிப்புடன் பெருகச் செய்து மாணவர்களது சுயமான கற்றலுக்கு வழி செய்வதுடன், பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைவரினதும் தேவைகளையும் இனங்கண்டு பூர்த்தி செய்வதாகும்.

இங்கே பல்கலைக்கழகத்தினது எல்லையை ஒரு குறுகிய வட்டத்தினுள் அடக்கிவிடாது பரந்துபட்ட பூமியின் பிரதேசமாக அதனுள் வாழும் எம்மவர்களையும் உள்ளடக்கி அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலமாகவும் இந்நகரமயமாக்கல் திட்டத்தினை உருவாக்குதல் வேண்டும். எது எப்படியிருப்பினும் இத்திட்டத்தின் பயனாளிகளாக முதலில் கல்வி கற்கும் மாணவர்களும் பின்னர் பணியாளர்களும் அதனுடன் பல்கலைக்கழக சமூகமும் அதனுடனிணைந்த எம்மக்களும் இருப்பர்.

பல்கலைக்கழகம் அமைந்துள்ள பிரதேசம் சார்ந்து, இவ் அபிவிருத்தியை நோக்குவதனால் பல்கலைக்கழகத்தைச் சுற்றியொரு வெளிவட்டப் பாதைபோன்ற அமைப்பு உருவாக்கப்படவேண்டும். இது எந்தெந்தப் பிரதேசங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்பதனை எம்மவர்கள் தங்களுடைய கருத்துக்கள் மூலம் எமக்குத் தெரியப்படுத்தலாம்.

பல்கலைக்கழக நகரம் எனும் போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தினது விஞ்ஞான, கலைப்பீடங்கள், முகாமைத்துவ கற்கைகள் பீடம், மருத்துவபீடம் இவற்றுடன் மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைத்துறை, கைதடியிலுள்ள சித்தமருத்துவத்துறை என்பவை உள்ளடங்கலாக இப்பல்கலைக்கழக நகரம் அமைய வேண்டும். திருநெல்வேலியிலுள்ள பல்கலைக்கழகத்தின் இடவசதி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இதற்குத் தேவையான இடவசதி மற்றும் மாணவர்கள் கற்பதற்கான வசதிவாய்ப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியே இத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

இப்பல்கலைக்கழகத்தை உலக தரம் வாய்ந்ததாக மாற்றுவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும். பல்கலைக்கழகம் தவிர்ந்து இப்பிரதேசத்தில் பல கல்வி நிறுவனங்கள், கலாசார மண்டபங்கள் இன்னும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என பலவும் உள்ளன.

இவற்றுக்கான அபிவிருத்தியையும் இங்கே சேர்த்து நோக்குவது நன்று. இவற்றுக்கும் மேலாக மாநகர சபை மற்றும் பிரதேச சபை, மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் இன்னும் மின்சார சபை, தொலைபேசி நிலையங்கள் ஆகியனவற்றிடம் இப்பிரதேசம் சார்ந்த அபிவிருத்தி பற்றிய அவர்களது கணிப்பீடும் திட்டமும் இருக்கும். அதனால் அவர்களுடனும் கலந்துரையாடி அனைவரும் ஒத்துக்கொள்ளும் பொது திட்டத்தை அந்தந்த துறைசார்ந்த பயனாளிகளைக் கருத்தில் கொண்டு உருவாக்க வேண்டும். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

உதாரணத்திற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு வருகைதரும் தென்பகுதி மக்கள் பல்கலைக்கழகத்திற்கு வருவது சுலபமல்ல. குறிப்பாக யாழ்ப்பாண நகரத்திலிருந்து பல்கலைக்கழகத்தை நோக்கி பயணிப்பதற்கு பலரிடமும் விசாரிக்க வேண்டியிருக்கின்றது. பரமேஸ்வராச் சந்தியிலிருந்து பல்கலைக்கழகத்தை நோக்கிய பரமேஸ்வரா வீதியில் நெரிசலாக வாகனங்கள் பலவாறாக நிறுத்தப்படுவதனால் அது அசௌகரிய நிலையை தோற்றுவிக்க காரணமாயிருக்கின்றது.

இன்னும் பரமேஸ்வரா சந்தியினால் பலாலியில் பயணிக்கும் வாகனங்களும் பரமேஸ்வரா வீதியிலிருந்து வரும் வாகனங்களும் ஒழுங்கு முறைப்படி பயணிக்காமையால் அநேகமான வேளைகளில் விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்பாகிவிடுகின்றது. இதனை சீர்செய்வதற்கு இது சார்ந்த அனைவருடனும் கலந்தாலோசித்து, அனைவரும் இலகுவாக பயணஞ் செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கலாம். இதேபோன்று திருநெல்வேலி சந்தை என பல இடங்களுக்கு பயணிப்பதற்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை, பணியாளர்களை ஏற்றிவரும் பேருந்து வண்டிகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் இலகு பயணத்திற்கு உதவ முடியும். இன்னும் பற்பல வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் கல்விகற்பதற்காக வரும் மாணவர்களின் வசதியை மேம்படுத்தலாம்.

பல்கலைக்கழக நகரம் சார்ந்த ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை உதாரணமாகக் காணலாம். அங்கே 17 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பிரதேசத்தை பல்கலைக்கழக நகரமாக உருவாக்குகின்றார்கள். இதனை மையப்படுத்தி நோக்கினால் குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைந்து இனங்காண வேண்டிய தேவையும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழகத்தினுள்ளும் வெளியிலும் இயல்பு நிலையை தோற்றுவிக்க வேண்டிய தேவையும் இன்னும் மாணவர்கள் தங்கி படிப்பதற்கான தங்குமிட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதில் மாணவர்களுக்கான உணவு வசதிகள் தரத்துடன் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனை பல்கலைக்கழகத்திற்கு வெளியே பல்கலைக்கழகத்தைச்சூழ குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள காணிகளை மக்களின் விருப்புடன் பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் விருப்பின் பேரில் கையளிக்க விரும்பும். புலம்பெயர்ந்த எம்மவர்களுடன் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட வேண்டும்.

மேலும் பல்கலைக்கழகத்தை அண்டியுள்ள மக்களின் குடியிருப்பினுள் அவர்களுக்கான வங்கிக்கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்கள் தங்கிப் படிக்க தங்குமிட வசதிகளையும் ஏற்படுத்தி அவர்களுக்காக தங்குமிடங்களில் மாதாந்த வாடகையை ஒரு சீரான அளவில் ஏற்படுத்திக் கொடுக்கவும் வழிசெய்ய வேண்டும். மேலும் பல்கலைக்கழகத்தின் அயலிலுள்ள கடைகளில் ஒழுங்கு முறைகளைப் பேணுதல், குறிப்பாக சாப்பாட்டுக் கடைகளில் சுத்தம் பேணுதல், அங்குள்ள பொருட்களின் விலைகளில் தளம்பலேற்படாதவாறு பார்வையிடுதல், கடைச் சொந்தக்காரர்களுக்கு வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், கடைகளுக்கு முன்பாக உள்ள பாதைகளைச் செப்பனிடுதல், போக்குவரத்துக்கு இடையூறில்லாத நிலையை ஏற்படுத்தல் என்பனவாகும்.

தற்போதிருக்கும் குறைகளையும் வருங்கால தேவைகளையும் இனங்கண்டு அதிலிருந்து இங்கு கல்விகற்கும் மாணவ மாணவியருக்கும் பணிபுரியும் அனைவருக்கும் தேவையான வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் மாணவர்களுக்கு சுயமான கற்றலுக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதும் மிகவும் முக்கியமானதாகும். இன்னும் வினைத்திறனான சேவையைப் பெற்றுக்கொள்ள பணிபுரிபவர்களுக்கான வசதிவாய்ப்புக்கள் பெருக வேண்டும்.

இவற்றுடன் பல்கலைக்கழகத்தில் அக்கறையுள்ள அன்புள்ளங்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் இதில் இணைத்து பல்கலைக்கழகத்தை அடுத்த நிலைக்கு நகர்த்துவதற்கான வழியையும் நாம் காண வேண்டியது முக்கியமானதாகும். இது சார்ந்து உங்களது கருத்துக்களை பேராசிரியர் கு.மிகுந்தன், விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கும் gmikunthan@gmail.com என்ற ஈமெயிலிற்கும் அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் இப்பல்கலைக்கழக நகர திட்டத்திற்கு உரம் சேர்க்கும்.

**பேராசிரியர் கு.மிகுந்தன்**
**விவசாயபீடம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



யாழ். மாநகர சபையின் அனுசரணையுடன் கல்வி முன்னேற்ற கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச கணனி வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாநகர சபை உறுப்பினர் சுதர்சிங் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மரியன்னை பேராலய பங்குத்தந்தை ஆர்.எக்ஸ். சகாயநாயகம், யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் எல்லைக்குள் சீனப் படைகள் நுழைந்தன

இந்திய-சீன எல்லையான காஷ்மீரில் உள்ள லடாக் பகுதிக்குள் சீனப் படைகள் அத்துமீறி சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் உள்ளே நுழைந்துள்ளதை அடுத்து இதனை அறிந்த இந்திய இராணுவமும் அங்கு சென்றுள்ளதால், அப்பகு தியில் பதற்றம் நிலவுகிறது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள லடாக் பகுதியினுள் சுமார் 8 கிலோ மீற்றர் வரை ஊடுருவிய சீனப் படைகள், அங்கு கூடாரம் அமைத்து தங்கியுள்ளன. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 17 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள இப்பகுதிக்குள் கடந்த 15ஆம் திகதி இரவோடிரவாக 8 கிலோ மீற்றர் வரை ஊடுருவிய சீன மக்கள் விடுதலை இராணுவத்தை சேர்ந்த சுமார் 50 வீரர்கள் குறித்த பகுதியில் கூடாரம் அமைத்து தங்கியுள்ளனர்.

இந்த ஊடுருவல் பற்றிய தகவல் அறிந்த இந்திய இராணுவத்தின் லடாக் ஸ்கவுட்ஸ் வீரர்கள் அப்பகுதிக்கு விரைந்து சென்றமையால் பதற்றநிலை அதிகரித்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கருத்து தெரிவித்த உதம்பூர் வடக்கு இராணுவ பிரிவின் செய்தித் தொடர் பாளர், இதைப் போன்ற ஊடுரு வல்கள் கொடிநாள் கூட்டங்களின் மூலம் சரி செய்யப்படுவது வழக் கம் என தெரிவித்துள்ளார். எனி னும், இந்தப் புதிய ஊடுருவல் தொடர் பாக கொடி நாள் கூட்டத்திற்குஏற்பாடுசெய்யும்படி சீன இராணுவ அதி காரிகளுக்கு தகவல் அளிக்கப்பட்ட போது சீனத் தரப்பில் இரு ந்து சரியா ன பதில் அளிக்கப்ப டவில் லை என இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

# அதட்டுகிறது அமெரிக்கா மிரட்டுகிறது வடகொரியா

கொரிய தீபகற்ப பகுதியில் போர் மூளும் சூழ்நிலையை வட கொரியா ஏற்படுத்தி வருகிறது. இதனை முடிவிற்கு கொண்டுவர வேண்டுமானால் முதலில் ஐ.நா. பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் எனவும் மேலும் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுடனான பேச்சுவார்த்தைக்கு சில நிபந்தனைகளையும் அது விதித்துள்ளது. இதன்போது அணுஆயுத நடவடிக்கைகளை நிறுத்துவது தொடர்பாக வட கொரியா தெளிவான அறிக்கைகள் வெளியிட வேண்டும் என அமரிக்கா கூறியது.

இந்நிலையில், உலகில் உள்ள நாடுகள் அனைத்தும் அணு ஆயுத நடவடிக்கைகளை முதலில் நிறுத்த வேண்டும்.

அதற்கு முன்பு கொரிய தீபகற்ப பகுதியில் அணுஆயுத நவடிக்கைகளை நிறுத்துவது குறித்து அமெரிக்கா நினைக்கக்கூடாது என வட கொரியா இருக்கிறது.

மேலும் அதுவரை அணு ஆயுத நடவடிக்கைகள் தொடரும் என்றும் வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் வட கொரியா மூன்றாவது அணுகுண்டு சோதனையை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் ஆங்கிலம் தொடர்பான கற்கை நெறிகள்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES நிறுவனம் கடந்த 6 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இன்று கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கல்முனை பிரதேசங்களில் கிளைகளை நிறுவி கல்விச் சேவையில் ஒரு மகத்தான பணியினை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் ஆங்கிலத்திற்கு அதி முக்கியத்துவம் கொடுத்து பல வகையான கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றில் சர்வதேச கற்கை நெறிகளையும் மற்றும் இக்கல்வி நிறுவனத்தினால் விசேடமாக உருவாக்கப்பட்ட கற்கை நெறிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. British College of higher studies நிறுவனத்தின் இத்தகைய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பல காரணங்களைக் கூறலாம்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஆங்கிலம் கற்பித்தலில் புலமை பெற்ற நிபுணர்களை உள்ளடக்கிய குழாம் மூலம் உருவாக்கப்பட்ட விசேட பாடத்திட்டம்

- ஒவ்வொரு கற்கை நெறியும reading, writing, speaking, listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் மூலம் கற்பித்தல்
- 12 , இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்களைக் கொண்ட சிறந்த கற்பித்தல் குழாம்
- நவீன தொழில் நுட்பங்கள், Visuals மூலம் சிறந்த நடைமுறைப் பயிற்சிகள், ஆங்கில அறிவு குறைந்தவர்களுக்கு தனிப்பட்ட கவனம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடுகள்
- அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்

**விளம்பரவிபரணம்**

BCHS நிறுவனத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள்

### • City & Guilds- $A_1$ English Exam

U.K இல் உள்ள ஒருவர் திருமணத்தின் பின்னர் தனது கணவன/மனைவிக்கு U.K. நிரந்தர வதிவிட விசாவுக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னர் இலங்கையில் உள்ள கணவன/மனைவி $A_1$ English Exam ஐ பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

BCHS இப்பரீட்சையின் முகவராக செயற்படுவதுடன் தனது கிளைகளிலேயே மாணவர்கள் பரீட்சை நிலையமாக தெரிவு செய்வதற்கு வசதியினை ஏற்படுத்தி கொடுத்துள்ளனர். இதுவரை 650 மாணவர்கள் இப்பரீட்சையினை பூர்த்தி செய்திருப்பதுடன் தற்போது 32 மாணவர்கள் May 08ஆம் திகதி பரீட்சை எழுத தங்களை பதிவு செய்துள்ளனர். இங்கு மிகச் சிறந்த கற்பித்தல் முறை காரணமாக $A_1$ பரீட்சை பெறுபேறுகள் வெற்றிகரமாக அமைகின்றன.

### • City & Guilds- $B_1$ English Exam

Student visa மூலம U.K. செல்வதற்கு தீர்மானித்துள்ள மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி அடைந்தால் மட்டுமே U.K. செல்வது சாத்தியமாகும். இப்பரீட்சைக்கும் இந்நிறுவனத்தின் கிளைகளிலேயே தோற்ற முடியும். இப்பரீட்சையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் U.K ல் Certificate / Diploma level இல் இருந்து தமது கற்கை நெறிகளை தொடர முடியும்.

### • IELTS – International English Language System

U.S.A, Canada, Australia, New Zealand, U.K போன்ற நாடுகளுக்கு மாணவர்கள் செல்வதற்கு இப்பரீட்சை மிக முக்கியமானது. Britith Council இனால் நடத்தப்படும். இப்பரீட்சையில் எடுக்க வேண்டிய புள்ளிகளின் அளவு ஒவ்வொரு நாட்டுக்கும் வேறுபடும். BCHS நிறுவனம் இப்பரீட்சைக்குரிய முகவராக தொழிற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### • Spoken English With Grammer

இக்கற்கை நெறி 6 தொடக்கம் 8 கிழமைகளை உள்ளடக்கியதான துரித பயிற்சி நெறியாக காணப்படுகின்றது. ஆங்கிலப் புலமையில் சிறந்து விளங்கும் ஆசிரியர் குழாமினால் சர்வதேச தராதரத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட ஒரு பாடத்திட்டத்தினை அடிப்படையாக கொண்டு இப்பாடநெறி கற்பிக்கப்படுகின்றது. இப்பாடத்திட்டம் இந்நிறுவனத்திற்கு என பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டிருப்பதுடன் குறுகிய காலத்தில் ஆங்கில அறிவை பெறுவதற்கு பெரும் வாய்ப்பாக அமைகிறது.

### • Diploma /Advance Diploma In English

இப்பாடநெறிகள் ஆங்கிலத்தில் ஓரளவு புலமை உள்ளவர்களுக்காக உருவாக்கப்பட்ட பாடத்திட்டம். இது இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களை உள்ளடக்கியதாக உள்ளது. Spoken English with Grammer பாடநெறியை பூர்த்தி செய்தவர்கள் தொடர்ந்து தமது ஆங்கில அறிவை பெருக்கி கொள்வதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

### • Young Learners for English

இது ஒரு சர்வதேச பரீட்சையாகும். 7 தொடக்கம் 12 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு என BCHS இனால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கற்கை நெறி. பெற்றோர்கள் ஆங்கிலத்தின் தற்போதைய முக்கியத்துவத்தை உணர்ந்து சிறுபராயத்திலேயே பிள்ளைகளுக்கு இப்பாடநெறிகளை கற்பிப்பதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை அவர்களுக்கு பெற்றுத்தர முடியும். இப்பாட நெறியானது தொடர்ந்து பல நிலைகளை (Levels) கொண்டு இருப்பதால் இந்நிலைகளைப் பூர்த்தி செய்து ஆங்கிலத்தில் ஒரு பட்டதாரியாக வெளிவர முடியும். ஒவ்வொரு பரீட்சை முடிவிலும் University of Cambridge நேரடியாக வழங்கும் சான்றிதழ்கள். மாணவர்களுக்கு ஒரு சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுத்தரும். எனவே "ஆங்கில அறிவு" தொடர்பான தேடல். மாணவர்களின் தேவைக்கு ஏற்ப வேறுபடுவதால் அனைவரினதும் தேடலை பூர்த்தி செய்கின்ற நிறுவனமாக British College of higher Studies விளங்குகின்றது.


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

Excellent Teachers' Panel & Individual Attention

**Spoken English With Grammar-Quick Learning Course**

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Diploma / Advanced Diploma in English**

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி.
ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என்பன விரிவாகக் கற்பிக்கப்படும்.

**IELTS - British Council**
**B1 - Exam City & Guilds**

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia மற்றும் UK செல்ல உள்ளவர்களுக்கு ஏற்றது.

**A1 Exam - Sponsor/Settlement Visa**

மூலம் UK செல்பவர்களுக்கு British High Commissionனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**Young Learners for English (YLE)**

வயதெல்லை 7 - 12 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேச பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

Batch I - 22.04.2013 Batch II - 27.04.2013 Batch III - 29.04.2013 Batch IV - 04.05.2013

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

BCHS

**Jaffna Branch:**
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna.
Tel: 021 222 4550

**Vavuniya Branch:**
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

(சி/3060)

**Hot Lines : 077 722 2422, 077 758 5913, 071 429 9935, 077 773 0074**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட முகம் படைத்த இரவு,. இதய ஆசைகளின் செவிலித்தாய்.

-ஷேக்ஸ்பியர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# சிஷ்யா விளக்கை ஏற்றவா? சுவாமி சற்றுப் பொறுங்கள்!

தபோவனத்தில் முனிவர் ஒருவர் தனது சிஷ்யனுக்கு போதனை செய்வது வழக்கம்.

ஒருநாள் இரவுப் பொழுது முனிவர் உபநிடதம் பற்றி தனது சீடனுக்குப் போதித்தார்.

அவ்வாறு போதிக்கையில், சிஷ்யா! நான் வாயால் பேசுகிறேன். நீ காதால் கேட்கிறாய். வீணாக ஏன் இந்த விளக்கு? விளக்கை அணைத்து விட்டால் எரிகின்ற எண்ணெய் மிச்சம் அல்லவா என்றார் முனிவர்.

அதற்கு சிஷ்யன், சுவாமி! தங்களின் அறிவுரை அற்புதம். அப்படியே செய்யுங்கள் என்றான்.

சுவாமி விளக்கை அணைத்துவிட்டு உபதேசத்தைத் தொடங்கினார்.

சுமார் ஒரு மணி நேரம் உபதேசம் நடந்தது. உபதேசம் முடியும் வேளையில், சிஷ்யா! நான் இப்போது விளக்கை ஏற்றப் போகிறேன் என்றார் சுவாமி.

சிஷ்யனோ அந்தரப்பட்டு சுவாமி சற்றுப் பொறுங்கள் என்றான். ஏன் சிஷ்யா? என்று வினவினார் முனிவர்.

சுவாமி! நீங்கள் வாயால் பேசுகிறீர்கள். நான் காதால் கேட்கிறேன் என்பதால், விளக்கை அணைத்து எண்ணெய்யை மீதப்படுத்தினீர்கள்?

நானோ! உங்கள் சிஷ்யன். இருட்டில் இருக்கும்போது எதற்காக வேட்டியை கட்டியிருக்க வேண்டும்? எனவே கட்டியிருந்த வேட்டியை அவிழ்த்து வைத்துவிட்டேன்.

இது வேட்டிக்கும் நல்லது. காற்றோட்டமும் கிடைக்கிறது என்றான் சிஷ்யன்.

முனிவர் திகைத்துப் போனார். நான் இரண்டு அடி பாய்ந்தேன். எனது சிஷ்யன் நாலு அடி பாய்ந்துவிட்டான் என்று புளகாங்கிதம் அடைந்தார் முனிவர்.

இது முனிவரும் சிஷ்யனுமாகிய கதை.

ஆனால் இன்றோ இலங்கைத் தீவில் இதுதான் நிலைமை.

மின்சாரக் கட்டணம் எகிறிப் போயுள்ளது. வீட்டில் வெளிச்சம் இலட்சுமிகரம் என்றால் நம் நாட்டில் வெளிச்சம்தான், செல்வத்தைத் தேய்க்கும் படையாக இருக்கிறது.

என்ன செய்வது? ஒரு லைற் எரிந்தால் போதும். மற்றும்படி எங்கும் இருட்டு மயம் என்றாகிவிட்டது எங்கள் வாழ்வு.

சிலவேளைகளில் மின்குமிழ் எரிவதால் கூட, வீடுகளில் சண்டை சச்சரவுகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

அந்த முனிவர் போல, லைற்றை அணைத்து விட்டு உபதேசிக்கின்ற-படிக்கின்ற சூழ்நிலையும் உருவாகிற்று.

இது ஒருபுறம் இருக்க, வெப்பமோ எங்களை வதைக்கிறது. இந்த நேரத்தில் அதிகரித்த மின் கட்டணம் மின் விசிறிக்கு கைவிலங்கு போடுகிறது.

ஆக, அந்தச் சிஷ்யன் செய்ததுபோல கட்டியிருப்பதைக் கழற்றி வைப்பதுதான் ஒரே வழி என்றாயிற்று.

ஆ! கடவுளே மக்களின் நிலை அறியாதவர் முடி தரித்தால் இப்படித்தான் இருண்ட வீட்டில் அம்மணமாக வாழ்க்கை நகரும்.

அந்த முனிவரும் அவரின் சிஷ்யனும் செய்த வேலையை இலங்கையர்களும் செய்ய வேண்டியதாயிற்று.

ஆனாலும் ஒரு எச்சரிக்கை! வீட்டில் லைற்றை எரியவைப்பதாக இருந்தால் அதை ஒருகணம் பெரிதாகச் சொல்லி வேட்டியை உடுப்பதற்கு அவகாசம் கொடுங்கள்.

# மனோ கணேசன் மீதான தாக்குதல் தறுதலைகளின் செயற்பாட்டுக்கு ஒப்பானது

## சி.பாஸ்கரா கண்டனம்

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மீதான தாக்குதல் தறுதலைகளின் தலைகால் தெரியாத செயற்பாட்டுக்கு ஒப்பான செயல் என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான பாஸ்கரா கண்டனம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையில்,

எமது மலையக மக்களின் விடிவிற்காக மலையக மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காக கூட்டு ஒப்பந்த சம்பள உயர்வு காணாததை நெற்றி கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே என நக்கீரர் சொன்னது போல பிழையை பிழை என்று அகிம்சை வழியில் கண்டித்ததற்கு பிழை விட்டதை ஒத்துக் கொள்ள முடியாமல் வன்முறையில் காட்டிய கோழை அரசியலை எமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் வன்முறைவாதிகளுக்கு மக்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள் என்பதையும் நாம் காரா சாரமாக சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

அதேவேளை உரியவர்களுக்கு உரிய பதில் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்லப்படும் என்பதை தெளிவாக தெரிவிப்பதுடன் தாக்குதல் நடத்தியவர்கள் தமது வரலாற்று தவறை உணர கூடிய காலம் செல்லாது என்பதையும் தெட்ட தெளிவாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதற்காக அவர்கள் மக்களின் தீர்ப்பின் பின் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டி வரும் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

சப்பிரகமுவ, கேகாலை மாவட்ட தேர்தல் கூட்டின் மூலம் தமிழ் வேட்பாளர்கள் தெரிவு செய்து வரலாற்று வெற்றி பெற்ற மக்களுக்கு அரசியல் சதி வேலை மக்களின் மனங்களில் வேல் பாய்ச்சும் வேலையாக உள்ளது என்பதை கூறி வைப்பதுடன் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை கொடுப்பதை உலக நாடுகள் உற்று நோக்கும் என்பதை அரசுக்கு தெரிவிப்பதுடன் சட்டம் தன் வேலையை சரியாக செய்ய வழிவிடும் படியும் கேட்டுக் கொள்கின்றோம் என பாஸ்கரா தெரிவித்தார். (செ-11)

# பாம்பு கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

புடையன் பாம்புக் கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பளை இத்தாவில் பகுதியைச் சேர்ந்த மாரிமுத்து அந்தோனிப்பிள்ளை (வயது 56) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 19 ஆம் திகதி இத்தாவில் பகுதியிலுள்ள தனது வீட்டிற்கு அருகிலுள்ள கிணற்றில் இரவு குளிப்பதற்காக சென்றவேளை இவரை பாம்பு தீண்டியுள்ளது.

இந்நிலையில் பளை வைத்தியசாலைக்கு உடனடியாக அவர் கொண்டு செல்லப்பட்டபோது அங்கு அவருக்கு உடனடியாக சிகிச்சையளிக்கப்படவில்லை.

இதனையடுத்து நேற்று முன்தினம் 20 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு குறித்த குடும்பஸ்தர் கொண்டு செல்லப்பட்டார்.

பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அவர் அங்கு உயிரிழந்தார்.

மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணையதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (செ-6)

# துப்புரவு பணிக்கான வேலைகள் நிறைவேற்றம்

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆதனங்கள், ஹோட்டல்கள், வீடுகள், பொது இடங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ள விரும்பும் வரியிறுப்பாளர்கள் மே மாதம் தொடக்கம் எமது மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பொறியியற் பிரிவினருடன் 0212222275 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு நியாயமான கட்டண அடிப்படையில் குறித்த வேலைகளை நிறைவேற்றிப் பயன்பெற முடியும் என யாழ்.மாநகர சபை செயலாளர் சி.தா.தர்மரட்ணம் தெரிவித்துள்ளார். (செ-11)

# இலங்கை கடற்படைக்கு இந்தியா பயிற்சி அளிப்பதா?

## தொல்.திருமாவளவன் கண்டனம்

இலங்கைக் கடற்படையினருக்கு இந்தியக் கப்பல்களில் பயிற்சி அளிப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 250 பேருக்கு இந்தியக் கடற்படைக் கப்பல்களில் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படையைச் சேர்ந்த சுஜாதா, தரங்கிணி, வருணா ஆகிய மூன்று கப்பல்கள் இந்தப் பயிற்சியை அளித்துள்ளன.

பயிற்சி பெற்ற சிங்களப் படையினருக்கு இந்திய தூதரகம் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசிய இலங்கைக் கடற்படை துணைத் தளபதி ஜெயந்த் கொலம்பகே என்பவர் இலங்கைக் கடற்படையினரில் 80% பேருக்கு இந்தியாதான் பயிற்சி அளிக்கிறது என்று கூறியுள்ளார்.

இது தமிழக மக்களைப் புண்படுத்துவதாக இருக்கிறது. தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் இந்திய அரசின் ஆதரவோடுதான் நடத்தப்படுகிறதோ என்ற ஐயத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.

எனவே, இந்திய அரசு இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிப்பதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம். இலங்கைக்கான இந்தியத் தூதராக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம் என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)

# நிர்வாகிகள் பதவியேற்பு

(மானிப்பாய்)

யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி அறவழி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சந்திரபால கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் திருமதி விமலேஸ்வரி, யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் கடந்த வருடம் சிறப்பாக செயற்பட்ட இளைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ-3-23)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதநேயம்



இன்றைய வாழ்க்கை நிலையைக் கவனிக்கும் போது நாம் தெரிந்தோ தெரியாமலோ சில கருத்துக்களை நம் மனதில் பதிய வைத்துக் கொள்கிறோம். நட்புறவை வளர்க்கும் சில கருத்துக்களை ஏற்றுவருகிறோம். அத்தோடு சில வெறுப்புணர்ச்சியூட்டும் கருத்துக்களையும் நாம் பதிவு செய்துகொண்டு வருகின்றோம்.

மொத்தத்தில் பார்த்தால் உலகில் நட்புணர்ச்சியை விட வெறுப்புணர்ச்சிதான் அதிகமாகக் காணப்படுகின்றது. கட்சிப் பற்றுக்காரணமாக, சாதிப்பற்றுக்காரணமாக நாட்டுப்பற்று, குடும்பப் பற்றுக் காரணமாகவும் வெறுப்புணர்ச்சியே வளர்க்கப்பட்டு வருவதை காண்கிறோம். இந்த வெறுப்புணர்ச்சி பெரிதும் கருத்து வேறுபாடுகள் காரணமாகவே எழக் காண்கின்றோம்.

ஒருவர் செய்கின்ற காரியமோ பேசுகிற பேச்சோ நமக்குப் பிடிக்காத காரணத்தால் கோபம் எழும்போதே அது மூளையிலுள்ள சிற்றறைகளைத் தாக்கி வெறுப்புணர்ச்சியைப் பதிவு செய்து விடுகிறது. கணவன்- மனைவி உறவில் இவ்வித வெறுப்புணர் ஏற்பட்டு விடுமானால் அந்தக் குடும்பத்தில் ஒருபோதும் அமைதியிருக்காது. ஒருவரையொருவர் சபித்துக் கொள்வதாகத்தான் இருக்கும். ஆனால் இதை அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இதனால் ஒருத்தருக்கு ஒருத்தர் தமக்கே, தம் குடும்பத்திற்கே தீமை விளைவித்துக்கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்துகொள்வதில்லை.

மனிதரை மனிதர் நேசிக்கவேண்டும், மதித்து நடக்கவேண்டும். கூடுமானவரை ஒருவரையொருவர் எப்போதும் வாழ்க வாழ்கவென வாழ்த்திக்கொண்டிருக்கவேண்டும். அப்போதுதான் நேசம் வளரும், வெறுப்பு நீங்கும், நன்மையேற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்ற செலவுகளை கட்டுப்படுத்தி நாட்டு மக்கள் வாழ வேண்டுமாம்

## மின்கட்டண உயர்வு குறித்து ஜனாதிபதி அட்வைஸ்

(கொழும்பு)

**இப்போதும் நாட்டைத் துண்டாடும் எதிர்பார்ப்பிலேயே சில சக்திகள் செயற்படுகின்றன. மீண்டும் இந்த நாட்டைப் பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை. வடமாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்டெம்பர் மாத்தில் நடத்தவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

வெலிஓயா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிங்கள மக்களுக்கு மகாவலி காணி உறுதிப்பத்திரம் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைத் தேர்தலை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடத்தவுள்ளோம். அதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தேர்தலை நடத்துவதற்கான வெற்றிகரமான சுபவேளையை நிர்ணயிக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

யுத்த காலத்தில் வெலிஓயா மக்கள் பட்ட துயரங்களை நாம் அறிவோம். பயங்கரவாத தாக்குதலில் பெருமளவிலான மக்கள் பலியாகியுமுள்ளனர். சிறிபுர, பராக்கிரமபுர உட்பட பல பகுதிகள் இரத்தக் காடுகளாகக் காட்சியளித்ததை நாம் காண முடிந்தது.

நாம் நாட்டைப் பாதுகாத்துள்ளோம். பிளவுபட்ட நாட்டை ஒன்றிணைத்துள்ளோம். எல்லைக் கிராமம் என்ற பெயரை இல்லாதொழித்துள்ளோம்.

நாடு பிளவுபடும் உடன்படிக்கையை நாம் கிழித்தெறிந்திரா விட்டால் இன்று எமக்கு நாடு இருந்திருக்காது. நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கும்.

இப்போதும் நாட்டைத் துண்டாடும் எதிர்பார்ப்பிலேயே சில சக்திகள் செயற்படுகின்றன. மீண்டும் இந்த நாட்டைப் பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை.

இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் நிறைவுற்றுள்ளன. இடம்பெயர்ந்த முஸ்லிம், சிங்கள மக்களையும் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

சிங்கள மக்கள் அகதி முகாம்களில் வாழவில்லை. அவர்கள் தமது உறவினர்களின் வீடுகளில் வாழ்கின்றனர். அவர்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது அவசியமாகும்.

நாடு என்ற ரீதியில் கடந்த 4 வருடங்களில் நாம் பல துறைகளையும் கட்டியெழுப்பியுள்ளோம். பல அமைச்சுக்களினூடாக தொடர்ந்தும் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மின்சாரக் கட்டணம் உயர்த்தியமை பற்றி எல்லோரும் பேசுகின்றார்கள். சிகரெட்டுக்கும் சாராயத்திற்கும் விலை அதிகரிக்கும் போது அவற்றின் பாவனை குறைவதில்லை. ஆகவே, தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, றிசாத் பதியுதீன், குணரத்ன, வீரக்கோன், திஸ்ஸ கரலியத்த பிரதியமைச்சர் டபிள்யூ பி. ஏக்கநாயக்க, எஸ்.எம். சந்திரசேன உட்பட பிரதியமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-2)

# யாழ்.மாவட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இப்போட்டிகளின் முடிவுகளை யாழ்.மாவட்ட தமிழ்த் தினப் போட்டியின் குழுத் தலைவரும் வடமராட்சி கல்விப் பணிப்பாளருமான சி.நந்தகுமார் அனுப்பி வைத்துள்ளார். இதனடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

**பிரிவு I**

சி.மதுசா (யா/சென்.ஜோன் பொஸ்கோ), ம.மேரிசெபஸ்திகா (கற்கோவளம் மெ.மி.த.க.பா.), ந.சுவர்ணானா (யா/அருணோதயாக் கல்லூரி)

**பிரிவு II**

ப.பவதாரகன் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஏ.மயூரி (யா/மெதடிஸ்த பெண்கள் உ.த.பா.), லி.தீபிகா (யா/மகாஜனாக் கல்லூரி)

**ஆக்கத்திறன் செயற்பாடு**

**பிரிவு I**

இ.விதுஷன் (யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பா.), ம.வீணஜா (யா/அல்லாரை அரசினர் தமிழ் வித்தி.), ஜெ.கௌசிகன் (யா/சென். ஜோன் பொஸ்கோ)

**பேச்சு**

**பிரிவு I**

சி.கஜன் (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.), வி.துசன்யா (யா/மகாஜனாக் கல்லூரி), இ.ஓவியா (யா/யாழ்.இந்து ஆரம்பப் பா.)

**பிரிவு-II**

ஜெ.சரண்யா (யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி), ம.பிரியதர்சினி (யா/நெடுந்தீவு றோ.க.த.க.மகளிர் கல்லூரி), ஜெ.சுஜிதா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி.)

**பிரிவு-III**

க.திவ்யா (யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி), சி.வைஷ்ணவி (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பா.), அ.ரூபகன் (யா/இளவாலை ஹென்றியரசர் கல்லூரி)

**பிரிவு -IV**

ர.கோபிகா (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி.), ச.சங்கர்ஜீ (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), அ.உதயமாலினி (யா/நயினாதீவு ஸ்ரீகணேச மகா வித்தி.)

**பிரிவு -V**

ஸ்ரீ.சிவஸ்கந்தா (யா/இந்துக் கல்லூரி), அ.சாம்பவி (யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), ப.கீதாஞ்சலி (யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.)

**பாவோதல்**

**பிரிவு I**

சொ.கோவர்த்தனி (யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தி.), கி.கோபிராம் (யா/இந்து ஆரம்பப் பாடசாலை), கே.விதுர்ஷனா (சாவகச்சேரி றோமன் கத்தோ. தமிழ்க்கலவன்)

**பிரிவு-II**

சி.மனாமிர்தன் (யா/யாழ்.இந்துக் கல்லூரி),வி.டிலக்ஷனா (யா/மல்லாகம் ம.வி.), ச.நிவாசிகா (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி.)

**பிரிவு- III**

வி.வத்சாங்கிதசர்மா (யா/யாழ்.இந்துக் கல்லூரி), மு.அபிராம் (யா/ஹாட்லிக் கல்லூரி), லோ.சிறிஹர்சன் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி)

**பிரிவு -IV**

மு.சுதர்சினி (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சு.சுரேஜனா (யா/மணற்காடு றோ.க.த.க.பா.), ற.நிசாந்தன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**பிரிவு-V**

ம.தயானி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), சோ.வைதேகி (வட இந்து மகளிர் கல்லூரி), து.யமுனாமலர் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

**இசையும் அசைவும் தனி**

**பிரிவு-I**

ர.மேரிதுசாந்தி (யா/மானிப்பாய் சென். ஆன்ஸ் ம.வி.), மு.தமிழாயினி (யா/கட்டைவேலி மெ.மி.த.க.பா.), பே.கபில்ஜா (யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.)

**நடனம் தனி**

**பிரிவு-II**

கு.பானுஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கி.தனபைரவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), க.சங்கவி (யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா)

**பிரிவு -III**

பா.பானு (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), செ.பிரசாந்தன் (யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி), கு.அனுஷா (யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா)

**பிரிவு-IV**

தி.அபிராமி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.சுசந்திகா (யா/மகாஜனாக் கல்லூரி), அ.தேனுஷா (யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)

**பிரிவு -V**

க.கௌதமன் (யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), க.லாவண்யா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ம.மயுதினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**நடனம் குழு**

**(தரங்கள் 4-5)**

யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி, யா/விக்டோறியாக் கல்லூரி

**நாட்டிய நாடகம்**

**பிரிவு-திறந்தபோட்டி**

யா/விக்டோறியாக் கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**இசை தனி**

**பிரிவு-II**

அ.ஆரபி (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பா.), க.சியாமளன் (யா/விக்டோறியாக் கல்லூரி), ர.திலக்சன் (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.)

**பிரிவு-III**

அ.ஆதித்யா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பா.), சி.ரமணன் (ஹாட்லிக் கல்லூரி), பி.மிதுலா (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**பிரிவு-V**

சி.நிதர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஜெ.மதூஷிகன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.சண்முகப்பிரியன் (யா/யூனியன் கல்லூரி)

**இசை குழு**

**பிரிவு-திறந்த போட்டி (தரம் 6-9)**

ஹாட்லிக் கல்லூரி, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பா., சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**தரம் 12-13**

யா/யாழ்.இந்துக் கல்லூரி, யா/இராமநாதன் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**வில்லுப்பாட்டு**

**பிரிவு-திறந்த போட்டி**

யா/வட்டு இந்துக் கல்லூரி, யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

**விவாதம்**

**பிரிவு-திறந்தபோட்டி**

யா/யாழ்.இந்துக் கல்லூரி, யா/மகாஜனாக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**இசை தனி பிரிவு-IV**

இ.கீர்த்திகா (யா/புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி),சி.சுலக்சன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி.), த.பவதாரிணி (யா/யூனியன் கல்லூரி)

**தமிழறிவு வினாவிடை**

**பிரிவு-திறந்தபோட்டி**

வட இந்து மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, யா/வேலணை மத்திய கல்லூரி

**நாட்டார் பாடல் பிரிவு**

**திறந்த போட்டி**

யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யா/பொலிகண்டி இ.த.க.பா.

**மேடை நாடகம் பிரிவு**

**திறந்த போட்டி**

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யா/யாழ்.இந்துக் கல்லூரி,ஹாட்லிக் கல்லூரி

# இடைக்கால நிர்வாகசபை கோரிக்கை நியாயமற்றது

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இடைக்கால நிர்வாகசபைக் கோரிக்கை நியாயமற்றது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கை ஒன்றிணைத்து இடைக்கால நிர்வாக சபையொன்றை உருவாக்க வேண்டுமென அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இலங்கைப் பிரச்சினை பற்றி பேசுவதில் பயனில்லை. மாறாக அரசாங்கத்துடனேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். நாட்டின் உள் விவகாரங்களில் வெளிநாடுகளைத் தலையிடச் செய்யக் கோருவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று கூறினார்.

இதேவேளை, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை முடக்கும் வகையில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தடுப்பதற்காகவே இவ்வாறு இடைக்கால நிர்வாக சபையைக் கோரியதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெல்லி அபார வெற்றி

பலமான மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தி டில்லி டேர்டேவில்ஸ் அணி 9 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

6-வது ஐ.பி.எல். தொடரின் 28-வது போட்டி டில்லியில் உள்ள பெரோஷா கொட்லா மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகியது.

இதில் உள்ளூர் அணியான டில்லி டேர் டேவில்ஸ்அணி, மும்பை இந்தியன்ஸ்அணியை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் துடுப்பாட்டத் தைத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களின் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ரோகித் சர்மா 43 பந்துகளில் அதிரடியாக 73 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் டில்லி அணி சார்பாக உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

162 என்ற வெற்றியிலக்குடன் துடுப்பாடக் களமிறங்கிய டில்லி அணிக்கு ஷேவாக் - மஹேல ஜோடி சிறந்த அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தது.

இவர்கள் இருவரும் இணைந்து 15.5 ஓவர்களில் 151 ஓட்டங்களை பகிர்ந்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

இறுதியில் டில்லி அணி 17-வது ஓவரின் நிறைவில் தன்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மஹேல 59 ஓட்டங்களைப் பெற்றதுடன் ஷேவாக், வோர்னர் முறையே ஆட்டமிழக்காமல் 95, 7 ஓட்டங்களை எடுத்தனர்.

மும்பையின் பந்துவீச்சில் மலிங்க வீழ்த்தப்பட்ட ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக வீரேந்திர ஷேவாக் தெரிவானார்.

இவ்வெற்றியின் 2 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட டில்லி அணி, தொடர் தோல்விகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்தது.


# புனேயை வீழ்த்தியது பஞ்சாப்

மில்லரின் அதிரடியால் புனே அணிக்கெதிரானபோட்டியில் பஞ்சாப் அணி, ஒரு பந்து மீதமிருக்க 7 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றுள்ளது. 6-வது ஐ.பி.எல் தொடரின் 29-வது போட்டி பஞ்சாப்பிலுள்ள மொஹாலியில் நேற்றிரவு 8 மணிக்கு நடைபெற்றது. இதில் உள்ளூர் அணியான பஞ்சாப் அணி, புனே வாரியர்ஸ் இந்தியாவை எதிர்கொண்டது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலில் துடுப்பாடக் களமிறங்கிய புனே அணி, 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 185 என்ற பலமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரோன் பின்ச் அதிகபட்ச ஓட்டமான 64 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அஸார் மஹமூத் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

186 என்ற கடின இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி, அதிரடி வீரர் கில்கிறிஸ்டை 4 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாற்றத்தைச் சந்தித்தது. தொடர்ந்து வந்த வீரர்களும் அதிரடியை வெளிப்படுத்தியதன் காரணமாக விக்கெட்டுக்களும் சரிந்தன. அந்த அணி ஒரு கட்டத்தில் 6.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களுடன் தடுமாற்றத்துடன் காணப்பட்ட போதிலும் அதன் பின்னர் இணைந்த மன்டீப் சிங் - டேவிட் மில்லர் ஜோடி அணியை ஒரு பந்து மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மன்டீப் சிங், டேவிட் மில்லர் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 77, 80 ஓட்டங்களை எடுத்தனர். புனே அணியின் பந்துவீச்சில் புவ்னேஸ்வர் குமார், அஜந்த மென்டிஸ், யுவ்ராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக பஞ்சாப் அணியின் வெற்றிக்கு வழிவகுத்த டேவிட் மில்லர் தெரிவானார்.




# தமிழ் மக்களின்...

முள்ளியவளை பகுதியில் 540 ஏக்கர் காட்டை அழித்து முஸ்லிம் மக்களை குடியேற்ற அமைச்சர் றிசாட் கடும் பிரயத்தனம் எடுந்திருந்த நிலையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த அப்பகுதி தமிழ் மக்கள் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் 10 பேர் கொண்ட இனத் தெரியாத குழுவினர் குறித்த பகுதிக்குள் நுழைந்து 4 பொது மக்களின் அரை நிரந்தர வீடுகளையும், சொத்துக் களையும் எரித்து தீக்கிரையாக்கியுள்ளனர்.

இதனுடன் நின்று விடாது, அங்கிருந்த ஏனைய மக்களின் வீடுகளையும் எரித்து தீக்கிரையாக்க அவர்கள் முற்பட்டுள்ளனர் .

காடழிப்பு தொடர்பாக இரு இனங்களுக்கிடையில் அண்மையில் முறுகல் நிலை ஏற்பட்ட பகுதியில் அமைந்துள்ள நான்கு குடிசைகளே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அக் குடிசையில் இருந்த உடைமைகள் முற்றாக சேதமடைந்துள்ளன. சம்பவம் இடம் பெற்ற வேளை இவ் வீடுகளில் இருந்தவர்கள் தேவைகளின் பொருட்டு வேறு இடங்களுக்கு சென்றிருந்ததனால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

திருமதி செந்தூரன் நிலோஜனா என்ற 27 வயதுடைய இரு பிள்ளைகளின் விதவைத் தாயின் குடிசையும் திருமதி தங்கமணி, திருமதி சுரேஸ்குமார் சுமங்கலி, செல்லத்தம்பி முகுந்தன் ஆகியோரது வீடுகளுமே இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும் மக்கள் உஷாரடைந்து இவ் அராஜக குழுவினரை எதிர்க்க முற்பட்ட நிலையில் அவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ய முற்பட்ட வேளை பொலிஸார் குறித்த சம்பவத்தை திசைதிருப்ப முயற்சிப்பதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ் அராஜக நடவடிக்கையால் முல்லைத்தீவு முள்ளியவளை கிராமமே கொதிப்பிலும் விரக்தியிலும் ஆழ்ந்துள்ளது. (செ-11)

# இலங்கை...

மற்றும் சுற்றுச்சூழல் ஆணையகத்தின் தலைவர் ஜோர்ஸ் இகானோஷியோ பொறோஸையும், பொறோசின் தலைமையிலான ஆணையகத்தின் 6 சிரேஷ்ட உறுப்பினர்களையும் சந்தித்து உரையாடியுள்ளார். இந்த சந்திப்பின் போது நீர் முகாமைத்துவம் குறித்து இலங்கை எடுக்க வேண்டிய யுக்திகள் குறித்தும் ஆராயப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதவிர இலங்கை மற்றும் ஸ்பெயினுக்கு இடையேயான வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிப்பது குறித்தும் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதாக பிரான்சில் உள்ள இலங்கை தூதுவராலய தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# "சர்ச்சைக்குரிய பேச்சை...

இந்த விவகாரமானது இலங்கை அரசாங்கத்துக்குள் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியிருந்ததுடன் சீனா உள்ளிட்ட பல தரப்பிடமிருந்து எதிர்ப்புகள் வந்ததாகவும் அறியமுடிகின்றது.

இதனையடுத்தே கொழும்புடன் கலந்தாலோசிக்காது எந்தவித இராஜதந்திரச் செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டாம் என தனது இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது. இதன்படி இனி வரும் காலப்பகுதியில் இலங்கையைப் பிரதிபடுத்துவப்படுத்தும் அனைத்துவெளிநாட்டு இராஜதந்திரிகள் புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை இராஜதந்திர கோட்பாடுகளுக்கு அப்பால் செயற்பட்டமை குறித்து இலங்கை அரசாங்கம் அமெரிக்காவிலுள்ள தனது தூதுவருக்கு கண்டனம் தெரிவித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது.

நாட்டுக்கு எதிராக கடும் சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நிலையில் தூதுவர்கள் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டால் அது மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தும். இந்த விடயம் உட்பட முக்கிய சில விடயங்களைக் கவனத்தில் கொண்டே இலங்கை அரசாங்கம் இராஜதந்திரச் செயற்பாடுகளுக்கு புதிய சுற்று நிருபத்தை தயாரித்துள்ளதாக கூறப்படுகின்றது. (செ-11)

# மரண அறிவித்தல்



## அந்தோனிப்பிள்ளை விக்டர் ஜெயகுமார்

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை விக்டர் ஜெயகுமார் நேற்று 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை அகால மரணம் எய்துவிட்டார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை (பூபாலன்) புனிதமலர் (சொர்ணம்) தம்பதியரின் அன்பு மகனும் தவநாதன்-ஜசிந்தா தம்பதியரின் மருமகனும் யூலியா தயாளினியின் அன்பு கணவரும் தனிஷ்கா, தனிஷ்டனின் தகப்பனாரும், அமலோ, பிறின்ஷி, சுயிந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரன் றஜனிஸ், கௌரி ஆகியோரின் மைத்துனரும் ரஞ்சித் ரூபினின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை 23.04.2013 காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : அந்தோனிப்பிள்ளை (பூபாலன்) குடும்பத்தினர்.

(C-3077)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடம்

* கணனி தமிழ் ரைப்பிங் செய்பவர்
  கணனியில் தமிழ் ரைப்பிங் தெரிந்த முன் அனுபவம் உள்ள இருபாலாரும்.
* பக்க வடிவமைப்பாளர்
  கணனியில் பக்க வடிவமைப்பில் பூரண தேர்ச்சியும் அனுபவமும் உள்ள இருபாலாரும்.
* ஒப்செட் இயந்திர இயக்குநர்
  ஒப்செட் இயந்திரம் இயக்குவதில் முழுமையான பயிற்சியும் அனுபவமும் உள்ள ஆண்கள்.

தகைமை உள்ளவர்கள் தமது சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று 22.04.2013 மற்றும் நாளை 23.04.2013 ஆகிய இரு தினங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

- பொதுமுகாமையாளர்



## மானிப்பாய்-ஆனைக்கோட்டையில் வைத்திய நிலையம்

எமது வைத்திய நிலையம் 11.04.2013 வியாழக் கிழமை தொடக்கம் 04 ஆம் கட்டை, யாழ்.றோட் (புக்கை தின்னிப் பிள்ளையார் கோயிலடி) ஆனைக் கோட்டையில் இடமாற்றப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

### எமது சேவைகள்

- ✔ சகலவிதமான நோய்களுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.
- ✔ இரத்தம், சிறுநீர் (ஆய்வுகூட சேவைகள்) நவீன முறையில் செய்து கொடுக்கப்படும்.
- ✔ விடுமுறையில் செல்பவர்களுக்கான வைத்தியச் சான்றிதழ் வழங்கப்படும்.

வைத்திய கலாநிதி சி.பவானந்தராஜா MBBS (SL)

**தினமும் பார்வையிடும் நேரங்கள்**

காலை 08.30 மணிமுதல் - 1.00 வரை
மாலை 04.30 மணிமுதல் - 8.30 வரை

**கஜமுகன் வைத்திய நிலையம்**

04 ஆம் கட்டை,
(புக்கை தின்னி பிள்ளையார் கோயிலடி)
யாழ்.றோட், ஆனைக்கோட்டை.

(சி-3067)


# மனோ கணேசன் தர...

...தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான அண்மைய சம்பள ஒப்பந்தத்தை எதிர்த்து, 16 தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு நேற்று ஞாயிற்றுக் கிழமை போராட்டம் நடத்த நடவடிக்கை எடுத்திருந்தது.

ஆனால் இந்தக் கூட்டமைப்புக்கு எதிராக இன்னொரு குழுவொன்று கொட்டகலை நகரில் போராட்டம் நடத்த முனைந்ததாகவும், அந்தக் குழுவினர் தம்மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதலில் காயமடைந்த தான் உள்ளிட்ட மூன்று பேர் கொட்டகலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் மனோ கணேசன் கூறினார்.

இதேவேளை, கொட்டகலையில் நடந்த தாக்குதல் காரணமாக தமது போராட்டம் இறுதியில் பத்தனை நகரில் நடத்தப்பட்டதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மேலும் தெரிவித்தார். (செ-11)


**காணி விற்பனைக்கு**

இடம்
பூந்தோட்டம் தெல்லிப்பளை.

தொடர்புகளுக்கு:- மகி
077 9332764 (2427)



**"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"**

பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
**பயிற்சிப்பட்டறை**
யாழ்.நகரில் ஒவ்வொரு சனிக்கிழமைகள் தோறும்.
(9.00-12.00)
தொடர்பு: 0777822014 www.cse.lk


# மரண அறிவித்தல்

## மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை

இத்தாவில் பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை அகால மரணமானார். அன்னார் செல்வரத்தினமணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற சோபிகாவின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான மரியதாஸ் திரேசம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகமுத்துப்பிள்ளையின் மருமகனும் லூர்த்து மலர், மேரி மங்கலம் காலஞ்சென்றவர்களான மேரி லோசா, மரியநாயகம் ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இத்தாவில் புனித பார்பரா்மா ஆலயத்தில் இன்று பிற்பகல் 2.30 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர். சதாபுரம், இத்தாவில், பளை.

(சி-3079)

# சட்ட...

...ரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகு மூலம் செல்ல முற்பட்டுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இதில் இரண்டு கைக்குழந்தைகள், 5 வயதுக்கும் 10 வயதுக்கும் இடைப்பட்ட 8 சிறுவர்கள், 20 பெண்கள் உட்பட 80 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம்நேற்று முழு நாளும் கடற்படையினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (செ-6,24)


## டோஹா, கட்டாரில் (Doha,Qatar) உடனடி வேலைவாய்ப்பு

பொறியியல், நிர்மாணத்துறையில் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் SLBFE அங்கிகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தினூடாக 30க்கும் அதிகமான வேலைவாய்ப்புக்கள் அதி உயர் சம்பளத்துடன் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன.

மேசன் 1200 - 1500 எலக்ரீசியன் 1200 - 2000 பெயின்டர் 1200 - 1500 Plumber 1200 - 1500 கம்பி கூடுகட்டுபவர் - 1200 - 1500 காப்பென்டர்ஸ் 1200 - 1500 பொது உதவியாளர் 900 - 1000 லேபர் 900 - 1000 கிளினிங் லேபர் 800 - 1000 Mechanic 1200 - 2000 Mechanic Helper 1000 Driver (Valit License) 1500 - 2000 6 G Welder 1200 - 1500

மிக குறைந்த கட்டணத்தில் இரண்டே வாரத்தில் பயணமாகலாம். உங்கள் விண்ணப்பங்கள் பாஸ் போர்ட் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் எதிர் வரும் 27.04.2013 A9 வீதி, பரந்தன் ஸ்டார் ரெஸ்ட் இலும் 28ஆம் திகதி இல 33, ஆசீர்வாதம் லேன்ட் ஹொஸ்பிட்டல் வீதி, கிறின் கிறாஸ் ஹோட்டல்யாழ்ப்பாணத்திலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (LL. No - 2490)

உடன் தொடர்புகளுக்கு : வவுனியாவில் T.P. : 0777 92 94 75, 077 23 93 165
தலைமை நிறுவனம் : Air Trust
Overseas Manpower Consultant, 945, Maradana Road, Colombo - 8
011 2676777, 077 2393165
(C-3041)



## தேவை

வைத்திய நிலையத்திற்கு (யாழ்ப்பாணம், வன்னி) பின்வரும் ஆட்கள் தேவையாகவுள்ளது.
**வைத்தியர்-** (MBBS, MD, RMP, RMO)
**தாதிமார்கள்**
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.: 0777750391
(சி-3069)



## பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெண் ஒருவரை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவைப்படுகின்றது.
உடன் தொடர்பு கொள்ளவும்.
இடம்:- (யாழ்ப்பாணம் அளவெட்டி)
மேலதிக விபரங்களுக்கு:-
077 8453450
(2411)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே.
இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021 222 8093
61, Kachchery-Nallur Road, Jaffna.
(யாழ் வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)
(2402)



**விசேட கருத்தரங்கு**

கிராம அலுவலர் தரம் III போட்டிப்பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு
ஆரம்பம்
April-25,26,27
9.00-4.00 Pm
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
N.P.கமல்தாசன்
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்
**நாவலர்** கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ் நகர்.
T.P.077 4696695



**கிராம அலுவலர் தரம் III போட்டிப் பரீட்சை2013**

வீசப்பட்ட வலையின் விசேட வெளியீடு-01
நுண்ணறிவு + பொது அறிவு + கிராம அலுவலர் சம்பந்தமான விடயங்கள் அடங்கிய சிறு தொகுப்பாக
**வெளிவந்து பரபரப்புடன் விற்பனையாகிறது**
யாழ்.நகர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட வடமாகாணத்தின் முன்னணி புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியும்
தொகுப்பாசிரியர் சி.என்.எச்.சாள்ஸ்
30/- மட்டுமே
குறிப்பிட்ட பிரதிகளே அச்சாகியுள்ளதால் உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்...
தொடர்புக்கு :



## அதிரடியாக புதிய வரவுகள்

**பிரான்ஸ், சுவிஸ், நோர்வே வெற்றிகரமாகச் செல்ல சட்ட ஆலோசனை**

- படிக்க, உழைக்க, விசா ஆலோசனை.
- IELTS தேவையில்லை.
- முந்துபவர்களிற்கே முன்னுரிமை.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:021 2219016,
021 5689090
(சி-3075)





## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

விஷேட கட்டண சலுகைகள்

**பொதி விநியோக சேவை**



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-3073)

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.